விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 108 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 23 வெள்ளிக்கிழமை (05.04.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின்

## தலைவராகச் செயற்பட மைத்திரிக்கு நீதிமன்றம் தடை



(கொழும்பு)
முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக செயற்படுவதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.
15

## துன்பங்களை மட்டுமே அனுபவித்த எம்மை நிம்மதியாக வாழ விடுங்கள்


### விடுதலையான முருகன், பயஸ், ஜெயக்குமார்



(யாழ்ப்பாணம்)
33 ஆண்டுகளாக துன்பங்களை மட்டுமே அனுபவித்த எம்மை இனிமேலாவது நிம்மதியாக வாழ விடுங்கள் என ராஜிவ் காந்தி கொலை வழக்கில் விடுதலையான முருகன், பயஸ், ஜெயக்குமார் தெரிவித்துள்ளனர்.
இது தொடர்பில் விடுதலை பெற்று வந்துள்ள முருகன் குறிப்பிடுகையில்,
16

ஆட்சியாளர்களின் இனவாதத்தால்

# வடக்கு மக்களே பாதிப்படைந்தனர்



### யாழில் ஜே.வி.பி தலைவர் அநுர

(யாழ்ப்பாணம்) அனைத்து ஆட்சியாளர்களின் இனவாதத்தால் ஏற்பட்ட யுத்தத்தால் வடக்கு மக்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாக ஜே.வி.பி தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
(02ஆம் பக்கம் பார்க்க)

## கல்வியமைச்சின் இணையம் மீது சைபர் தாக்குதல்

(கொழும்பு)
கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளம் அடையாளம் தெரியாத நபரொருவரால் ஊடுருவப்பட்டுள்ளதாக (Hack) தகவல் வெளியாகியுள்ளது.
"Anonymous
15

## மயங்கி விழுந்த குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)
மயங்கி விழுந்த குடும்பஸ்தர் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.
இதில் யாழ்ப்பாணம் திருநகரைச்
15

13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில்

## நாட்டின் அனைத்துக் கட்சிகளுடன் கலந்துரையாட வேண்டும் - ரணில்



(கொழும்பு)
13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் நாட்டிலுள்ள அனைத்துக் கட்சிகளுடனும் பேசவேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
13ஆவது திருத்தச் சட்டம் என்பது நாடு முழுவதும் நடைமுறைப்
15

## இலங்கைக்கு நேரே 10 நாட்களுக்கு

### சூரியன் உச்சம் கொடுக்கும்

(கொழும்பு)
இன்று (ஏப்ரல் 5) முதல் ஏப்ரல் 15 வரை இலங்கைக்கு மேலே சூரியன் உச்சம்கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக தேசியவானிலை மையத்தின் முன்னறிவிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.
இதேவேளை இன்றைய தினம்
04

## கிளிநொச்சி பிரமந்தனாறில் குடும்பஸ்தர் குத்திக் கொலை

### விளையாட்டுப் போட்டியில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தால் விபரீதம்

(கிளிநொச்சி)
கிளிநொச்சி பிரமந்தனாறு பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் குத்திப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.
நேற்றுப் பிற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.
இதில் அதே பகுதியைச் சேர்ந்த சவரிமுத்து ஜோன் பற்றிக் (வயது-32) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.
15

## 24 இந்திய மீனவர்கள் விடுதலை

(யாழ்ப்பாணம்)
நெடுந்தீவு கடலில் கடந்த மாதம் 21ஆம் திகதி, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட, 25 மீனவர்களில் 24 மீனவர்கள் 5 வருடங்களுக்கு ஒத்தி
15

யாழ்.ஊர்காவற்றுறையில்

## தாக்குதலுக்குச் சென்ற வன்முறைக் கும்பல்

### ஊரவர்களால் மடக்கிப் பிடிப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறைப் பகுதியில் இளைஞன் ஒருவரை தாக்குவதற்கு சென்ற வன்முறை கும்பலை, சேர்ந்த 10 பேரை ஊரவர்கள் மடக்கி பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ள
15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VISA SERVICES

உங்கள் வெளிநாட்டு கனவினை நனவாக்க 12 வருடகால அனுபவம் வாய்ந்த Winstar Visa Consultants உடன் இன்றே இணையுங்கள்

CANADA
UK
Student visa
Visit visa

100% விசா உத்தரவாதம்
விசாவின் பின்னரான கட்டணங்கள்

2013 ஆம் ஆண்டு முதல் தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்ற ஒரே ஒரு நிறுவனம்.





(359)

Winstar Consultants Pvt Ltd
இல.45, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
077 077 6979/ 021 222 6979


# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 10 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குக

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம் நடாத்தும் முன்பள்ளி கல்வி டிப்ளோமா கற்கைநெறி 2024/2025 இற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

குறித்த கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி முன்பள்ளி ஆசிரியராக இருத்தல் வேண்டும். என்பதுடன் க.பொ.த(சா.த) பரீட்சையில் தமிழ்மொழி உள்ளடங்கலாக ஆறு பாடங்களில் சித்தியடைத்திருப்பதுடன் அவற்றுள் ஆகக்குறைந்தது ஏதாவது இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியைக் கொண்டிருத்தல் வேண்டும்.அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மூதவையினால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய தேசிய தொழில் தகைமை மட்டம் 4 (NVQ-4) அல்லது அதற்குச் சமனான வேறு ஏதேனும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவத்தினை www.codl.jfn.ac.lk எனும் இணையத்தளத்தினூடாக தரவிறக்கம் செய்து, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் மக்கள் வங்கிக்கிளை கணக்கிலக்கம் 390012520003565 இற்கு விண்ணப்பப்படிவத்திற்கான கட்டணம் ரூபா. 500.00 இனைச் செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டினை இணைத்து 10.04.2024 இற்கு முன்னதாக கிடைக்க கூடியவாறு உதவிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ் பல்கலைக்கழகம், திருநெல்வேலி எனும் முகவரிக்குத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "முன்பள்ளி கல்வி டிப்ளோமா கற்கைநெறி (அணி-1)" எனக்குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும் என பல்கலைக்கழகத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-7,10)

## அதிகளவான உஷ்ணம்
# கல்முனையில் ரியூசன் வகுப்புகளை இடை நிறுத்த மாநகர சபை அறிவுறுத்து

கல்முனை மாநகர சபை ஆட்புல எல்லையினுள் இயங்கும் தனியார் கல்வி நிலையங்களில் தரம்-01 தொடக்கம் தரம்-10 வரையான மாணவர்களுக்கான அனைத்து கல்வி நடவடிக்கைகளையும் ஏப்ரல்-04 முதல் 15 ஆம் திகதி வரை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு கல்முனை மாநகர சபை அறிவுறுத்தியுள்ளது.

இம்மாதமானது அதிக உஷ்ணம் நிறைந்ததாக காணப்படுகின்றது.

இருந்த போதிலும் கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் பொருத்தமற்ற நேரங்களில் தொடர்ச்சியான வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருவதானது மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பொதுமக்கள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்கும் பல்வேறு சிரமங்களை ஏற்படுத்துவதாக மத அமைப்புக்கள் மற்றும் பொது மக்களிடம் இருந்து எமக்கு தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்று வருகின்றன.

இவற்றைக் கருத்தில் கொண்டு கல்முனை மாநகர எல்லைக்குட்பட்ட அனைத்து தனியார் கல்வி நிலையங்களிலும் தரம்-01 தொடக்கம் தரம்-10 வரையான மாணவர்களுக்கான அனைத்து கல்வி நடவடிக்கைகளையும் 2024.04.04 ஆம் திகதி தொடக்கம் 2024.04.15 ஆம் திகதி வரை தற்காலிகமாக இடைநிறுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-7,10)

## வடக்கு...

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஆசிரியர் சேவை சங்கத்தின் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாக கூறி மக்களுடன் ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்காகதான் யாழ்ப்பாணத்துக்கு பயணத்தை மேற்கொள்ளவில்லை, எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில், ஆட்சியாளர்கள் நம்மை வேறு பிரிக்கும் அரசியலிலேயே தொடர்ந்தும் ஈடுபடுகிறார்கள், அரசியல் நலனுக்கான இனவாத அரசியலே அவர்களது முதன்மையான நோக்கமாக இருந்தது.எமது மூதாதையர்கள் காலம் தொடங்கி அனைத்து ஆட்சியாளர்கள் இனவாதத்தை மக்கள் மனதில் விதைத்தார்கள்.

இதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் யுத்தத்தை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இதனால் பாரியளவில் பாதிக்கப்பட்ட மக்களாக வடக்கு மக்கள் இருக்கிறார்கள்.

இன்றும் அவர்களில் போராட்டத்துக்கு நீதி கிடைக்கவில்லை. எனினும், எமது தலைமுறையினர் இவ்வாறு இருக்க கூடாது.

எமது கட்சி எதிர்கால சந்ததியினரை மாற்றியமைக்கும். அவர்களின் சிந்தனைகளை மாற்றும். எதிர்கால சந்ததியினருக்கான சரியான பாதையை நாம் உருவாக்குவோம் என்றார். (ம-7,10)


அறிவாலயம் ஆளுமை விருத்திப் பயிலகத்தின் ஏற்பாட்டில்
தமிழகத்தின் பிரபல பேச்சாளர் இலக்கியச்சுடர்
த.இராமலிங்கம் அவர்கள் வளவாளராகப் பங்குகொள்ளும்
பட்டிமண்டபப் பயிலரங்கம்





இடம் : நல்லை ஆதீன மண்டபம், நல்லூர்
காலம் : 06.04.2024 சனி காலை 9 மணி
நீங்கள் பங்கேற்கும் பட்டிமன்றங்களில் ஆளுமைமிக்க பேச்சாளராக உங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்
அன்றைய தினம் மாலை 4.30 மணிக்கு இலக்கியச்சுடர் தலைமையில் சிந்தனை அரங்கம் இடம்பெறும். அதிற் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அறிவாலயம் ஆளுமை விருத்தியின் ஏற்பாட்டில்
இலக்கியச்சுடர் த.இராமலிங்கம்
(தமிழ்நாடு) அவர்கள் கலந்து கொள்ளும்
சிந்தனை அரங்கம்
இளைஞர்களின் எதிர்காலத்தை ஆகச் சிறப்பாகச் செப்பனிடுவது...
வீட்டுச்சூழல்
கல்விச்சூழல்





திரு.ஜீவா ஷஜீவன்
(ஆசிரியர் – தென்னாடு பத்திரிகை)





செல்வி.ந.அபிராமி
(மருத்துவபீட மாணவி)








திரு.வி.சாரங்கன்
(உதவி விரிவுரையாளர்)





திரு.வி.யோகேஷ்குமார்
(தமிழ்நாடு – தேவகோட்டை)
நட்புச்சூழல்
சமுதாயச் சூழல்
நிகழிடம்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபம்
நிகழ்பொழுது
06.04.2024 (சனிக்கிழமை) மாலை 4.30


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்





கடந்த 2024.03.06 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் கணேஸ் தவராசா (தாடி ஐயா)**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று 05.04.2024 வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

கைவேலி,
1 ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

இங்ஙனம்
குடும்பத்தினர்

(C-0068)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவு விவகார விமர்சனங்களால் கடுமையான அரசியல் சூழ்நிலை ஏற்படும்

## இந்தியாவிற்கான முன்னாள் இலங்கைத் தூதுவர்



(கொழும்பு)

**இந்திய தேர்தல் சூழலில் கச்சதீவு விவகாரத்தை பாஜக வாக்குகளை கவரும் முயற்சியில் ஈடுபட்டிருக்கலாம். ஆனால் தேர்தலிற்கு பின்னர் இந்திய அரசாங்கம் மீண்டும் பழைய நிலைக்கு செல்ல முடியாது அது கடினமான விடயம் என இந்தியாவிற்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் ஒஸ்டின் பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.**

ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய அரசாங்கம் இலங்கையின் கடல்சார் எல்லையை மீறினால் அது இலங்கையின் இறைமையை மீறும் செயலாக கருதப்படும் மேலும் இந்தியாவின் அழுத்தங்களிற்கு இலங்கை அரசாங்கம் அடிபணிந்தால் வட பகுதி மீனவர்களின் வாக்குகளில் குறிப்பிடத்தக்க வீதத்தினை இலங்கை அரசாங்கம் இழக்கும் எனவும் தெரிவித்தார்.

எங்கள் நாட்டின் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலை காரணமாகவும் தேர்தல் சூழ்நிலை காரணமாகவும் கச்சதீவு விடயத்தை கிளறியிருக்ககூடாது.

இந்தியாவின் முதலீடுகளை எதிர்கட்சியினர் விமர்சனம் செய்கின்ற நிலையில் கச்சதீவு விவகாரத்தினால் மேலும் விமர்சனங்கள் எழக்கூடும் இதனால் கடுமையான அரசியல் சூழ்நிலை உருவாகலாம் என தெரிவித்தார். (5-6)

## பெரமுனவின் உறுப்பினர் மரணம்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அனுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான கே.எச்.நந்தசேன திடீர் சுகவீனம் காரணமாக நேற்று காலை காலமானார்.

69 ஆவது வயதான அவர் சுகயீனம் காரணமாக அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (5-6)

# ஐ.எம்.எப் விருப்பத்துக்கு அமைய அரசியலமைப்பு இயற்றப்படவில்லை

## சரித ஹேரத்



(கொழும்பு)

“சர்வதேச நாணய நிதியத்தின் விருப்பத்துக்கு அமைய நாட்டின் அரசியலமைப்பு இயற்றப்படவில்லை” என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது” சர்வதேச நாணய நிதி யத்துடனான செயற்றிட்ட நடவடிக்கைகள் நிறைவு பெறும் வரை எந்த தேர்தலையும் நடத்த போவதில்லை என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடையாது. சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கையின் செயற்பாடுகள் எதிர்வரும் ஜுலை மாதம் நிறைவடைவதாக குறிப்பிடப்படுகின்றது. மேலும் பொதுத்தேர்தல் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

எதிர்வரும் செப்டெம்பர் அல்லது ஒக்டோபர் மாதம் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதற்கு முன்னர் எந்த தேர்தலும் நடத்தப்படாது என்ற நிலைப்பாட்டில் இருந்து கொண்டு தான் ஜனாதிபதி அவ்வாறு குறிப்பிட்டுள்ளார். சர்வதேச நாணய நிதியத்தின் விருப்பத்துக்கு அமைய நாட்டின் அரசியலமைப்பு இயற்றப்படவில்லை என தெரிவித்தார்.(5-6)

# கடந்த மூன்று மாதங்களில் 20 ஆயிரம் தொற்றாளர்கள் அடையாளம்

## தேசிய டெங்கு கட்டுப்பாட்டு மையம்

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டின் கடந்த மூன்று மாதங்களில் 20,000க்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

தற்போது நிலவும் வெப்பமான காலநிலை காரணமாக டெங்கு நுளம்புகளின் இனப்பெருக்கம் குறைவடைந்துள்ளதாகவும், டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 22.8 வீதத்தால் குறைந்துள்ளதாகவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

அதன்படி ஜனவரியில் 10,417 பேரும், பெப்ரவரியில் 6007 பேரும், மார்ச் மாதத்தில் 3615 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் கொழும்பு மாநகர சபையில் கஸ்பேவ, கடுவெல, மஹரகம, பியகம, கம்பஹா, வத்தளை, குருநாகல், சாவகச்சேரி ஆகிய பிரதேசங்கள் டெங்கு அபாயப் பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் இல்லாத வகையில் தாம் வாழும் சூழலைச் சுத்தப்படுத்துவதில் பொதுமக்களின் கவனம் செலுத்தப்பட வேண்டுமென தேசிய டெங்கு கட்டுப்பாட்டு மையம் மேலும் குறிப்பிட்டுள்ளது.(5-6)

# போலி வைத்தியர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## சுகாதார அமைச்சு



(கொழும்பு)

நாட்டில் போலி வைத்தியர்கள் மற்றும் போலி வைத்திய நிலையங்கள் தொடர்பில் அவசர விசாரணைகளை மேற்கொள்ள சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் பதிவு செய்யப்படாத வைத்தியர்கள் மற்றும் மருத்துவ நிறுவனங்கள் பல இருப்பதாக கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகளை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.

அவ்வாறான வைத்தியர்கள் மற்றும் மருத்துவ நிறுவனங்களுக்கு எதிராக உடனடியாக விசாரணை செய்யுமாறும் அவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு மாகாண மற்றும் மாவட்ட சுகாதார அதிகாரிகளுக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பணிப்புரை விடுத்துள்ளார். (5-6)

# பண்டிகை காலத்தை முன்னிட்டு விசேட போக்குவரத்து சேவை



(கொழும்பு)

பண்டிகை காலத்தை முன்னிட்டு விசேட பேருந்து சேவையொன்று இடம்பெறவுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

அதன்படி இன்று முதல் இந்த விசேட பேருந்து சேவை இடம்பெறவுள்ளது.

பண்டிகைக் காலங்களில் கிராமங்களுக்குச் செல்லும் பயணிகளின் வசதிக்காக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் பண்டுக ஸ்வர்ணஹன்ச தெரிவித்துள்ளார். அதன்படி, 200 சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளது.

மேலும் பண்டிகை காலத்தை முன்னிட்டு தினமும் 12 விசேட புகையிரத சேவைகளை எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் சேவையில் ஈடுபடுத்தத் தீர்மானித்துள்ளதாக புகையிரத திணைக்களம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பஞ்சாப்புக்கு 'கிங்' ஷசாங்க் சிங்

## இறுதி ஓவரில் வீழ்ந்தது குஜராத்



பரபரப்பான ஐ.பி.எல்., லீக் போட்டியில் ஷசாங்க் சிங் அரைச்சதம் கடந்து கைகொடுக்க பஞ்சாப் அணி 3 விக்கெட் வித்தியாசத்தில் குஜராத் அணியை வீழ்த்தியது.

இந்தியாவில் ஐ.பி.எல்., 17ஆவது சீசன் நடக்கிறது. அகமதாபாத்தில் நடந்த லீக் போட்டியில் குஜராத் - பஞ்சாப் அணிகள் மோதின.

குஜராத் அணிக்கு விரிதிமன் சகா (11) நிலைக்கவில்லை. கேன் வில்லியமசன் (26), தமிழகத்தின் சாய் சுதர்சன் (33) நம்பிக்கை அளித்தனர். ஹர்பிரீத் பிரார் பந்தை பவுண்டரிக்கு அனுப்பிய சுப்மன், 31 பந்துகளில் அரைச்சதம் கடந்தார்.

தொடர்ந்து அசத்திய சுப்மன், ரபாடா வீசிய 18ஆவது ஓவரில் வரிசையாக ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி விளாசினார். விஜய் சங்கர் (8) ஏமாற்றினார். ஹர்ஷல் படேல் வீசிய 19ஆவது ஓவரில் ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி அடித்த ராகுல் டிவாட்டியா, அர்ஷ்தீப் சிங் வீசிய கடைசி ஓவரில் வரிசையாக 2 பவுண்டரி விரட்டினார்.

20 ஓவர்களில் குஜராத் அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 199 ஓட்டங்களை எடுத்தது. சுப்மன் (89), டிவாட்டியா (23) ஆட்டமிழக்காமல் இருந்தனர். பந்துவீச்சில் பஞ்சாப் அணி சார்பில் ரபாடா 2 விக்கெட் வீழ்த்தினார்.

**தவான் ஏமாற்றம்**

சவாலான இலக்கை விரட்டிய பஞ்சாப் அணிக்கு அணித் தலைவர் ஷிகர் தவான் (1) ஏமாற்றினார். பின் இணைந்த பேர்ஸ்டோவ் (22), பிரப்சிம்ரன் சிங் (35) ஜோடி ஓரளவு கைகொடுத்தது. சாம் கர்ரான் (5), சிக்கந்தர் ராசா (15) சோபிக்கவில்லை. நூர் அகமது பந்தை சிக்சருக்கு அனுப்பிய ஷசாங்க் சிங், உமேஷ் யாதவ் வீசிய 11ஆவது ஓவரில் 2 பவுண்டரி, ஒரு சிக்சர் அடித்தார்.

**ஷசாங்க் அரைச்சதம்**

ரஷித் கான் வீசிய 16வது ஓவரின் முதலிரண்டு பந்தை சிக்சருக்கு அனுப்பிய ஜிதேஷ் சர்மா (16), அடுத்த பந்தில் ஆட்டமிழந்தார். பொறுப்பாக ஆடிய ஷசாங்க் சிங், 25 பந்தில் அரைச்சதம் எட்டினார். மோகித் சர்மா வீசிய 19ஆவது ஓவரில் 2 சிக்சர் உட்பட 18 ஓட்டங்கள் எடுக்கப்பட்டது. கடைசி ஓவரில் வெற்றிக்கு 7 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

தர்ஷன் நல்கண்டே பந்துவீசினார். முதல் பந்தில் அஹதோஷ் சர்மா (31) ஆட்டமிழந்தார். நான்காவது பந்தை பவுண்டரிக்கு விரட்டிய ஷசாங்க், அடுத்த பந்தில் ஒரு ஓட்டம் எடுத்து வெற்றியை உறுதி செய்தார்.

19.5 ஓவர்களில் பஞ்சாப் 7 விக்கெட்டுக்களை இழந்து 200 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. ஷசாங்க் (61), பிரார் (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர். (ம-7,10)

# றொனால்டோ 'ஹட்ரிக்'

## சவூதி புரோ லீக் போட்டியில்...

அபா அணிக்கு எதிரான சவுதி புரோ லீக் போட்டியில் அல்-நாசர் அணியின் கிறிஸ்ரியானோ றொனால்டோ "ஹட்ரிக்" கோல் அடித்து அசத்தினார்.

சவூதி அரேபியாவில், உள்ளூர் கழக அணிகள் பங்கேற்கும் சவுதி புரோ லீக் 48வது சீசன் நடக்கிறது.

இதன் லீக் போட்டியில் அபா - அல்-நாசர் அணிகள் மோதின.

இதில் கோல் மழை பொழிந்த அல்-நாசர் அணி 8:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

அல்-நாசர் சார்பில் போர்த்துக்கல் நட்சத்திர வீரர் கிறிஸ்ரியானோ றொனால்டோ "ஹட்ரிக்" கோல் (11, 21, 42ஆவது நிமிடம்) அடித்தார். இது, இந்த சீசனில் இவரது 3வது "ஹட்ரிக்" கோல். ஏற்கெனவே அல்-பதேஹ், அல்-தை அணிகளுக்கு எதிராக "ஹட்ரிக்" சாதனை படைத்திருந்தார்.

இது தவிர ஒட்டுமொத்த கால்பந்து அரங்கில் இவரது 65வது "ஹட்ரிக்" சாதனை. நடப்பு சீசனில் அதிக கோல் அடித்த வீரர்கள் வரிசையில் முதலிடத்தில் நீடிக்கிறார். இதுவரை 29 கோல் அடித்துள்ளார்.




அல்-நாசர் அணி இதுவரை விளையாடிய 26 போட்டியில் 20 வெற்றி, 2 "சமன்", 4 தோல்வி என 62 புள்ளிகளுடன் 2வது இடத்தில் நீடிக்கிறது. முதலிடத்தில் அல்-ஹிலால் அணி (74 புள்ளி) உள்ளது. (ம-7,10)

# வினோதமான தண்டனை



விமான நிலையத்தில் இஷான் கிஷான் "சுப்பர் மேன்" உடையில் காணப்பட்டதால் ரசிகர்கள் உற்சாகம் அடைந்தனர்.

ஐ.பி.எல்., தொடரில் ஐந்து முறை கிண்ணம் வென்ற அணி மும்பை. இம்முறை புதிய அணித் தலைவர் ஹர்திக் பாண்ட்யா தலைமையில் முதல் மூன்று போட்டிகளிலும் தோற்ற சோகத்தில் உள்ளது. அடுத்து நான்காவது போட்டியில் டில்லியை (ஏப். 7) சந்திக்க உள்ளது.

முன்னதாக மும்பை வீரர்கள் விமான நிலையம் வந்தபோது, இஷான் கிஷான் உள்ளிட்டோர் மும்பை லோகோவுடன் கூடிய, நீல நிறத்தினால் ஆன "சுப்பர் மேன்" உடையில் காணப்பட்டனர். இதைப் பார்த்த ரசிகர்கள் ஆச்சரியம் அடைந்தனர். இதற்கான காரணம் தற்போது தெரியவந்துள்ளது.

அடுத்தடுத்த தோல்விகளில் இருந்து மீண்டு வர திட்டமிட்டுள்ள மும்பை அணி நிர்வாகம், வீரர்களுக்கான கட்டுப்பாடுகளை மீண்டும் அறிமுகம் செய்துள்ளது.

அணியின் கூட்டம், பஸ்சிற்கு தாமதமாக வருதல் உள்ளிட்ட செயல்களுக்கு வீரர்களுக்கு தண்டனை கொடுக்க முடிவு செய்துள்ளது.

இதன் ஒருபகுதியாக, கூட்டத்திற்கு தாமதமாக வந்ததால் இஷான் கிஷான், ஷம்ஸ் முலானி, குமார் கார்த்திகேயா, நுவன் துஷார என நான்கு பேர் "சுப்பர் மேன்" ஆடை அணிந்து சென்றனர். இது தொடர்பான வீடியோ இணைய தளங்களில் "வைரல்" ஆகிவருகிறது. (ம-7,10)

## இலங்கைக்கு...

நாட்டின் பல பகுதிகளில் வெப்பநிலை அவதானம் செலுத்த வேண்டிய மட்டத்திற்கு மேலும் அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு, மத்திய, கிழக்கு, மேற்கு, சப்ரகமுவ, வடமேற்கு மற்றும் தென் மாகாணங்கள் மற்றும் மொனராகலை மாவட்டத்தின் சில இடங்களில் மனித உடலால் உணரப்படும் வெப்பம் கவனம் செலுத்த வேண்டிய மட்டத்தில் இருக்கும் என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

போதுமான அளவு தண்ணீர் அருந்துதல், முடிந்தவரை நிழலான இடங்களில் ஓய்வெடுப்பது, கடுமையான வெயிலில் வேலை செய்வதைக் கட்டுப்படுத்துதல் போன்ற சுகாதார ஆலோசனைகளை பின்பற்ற வேண்டும் என திணைக்களம் விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓமான் – இலங்கை

# சுற்றுலா புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து

(கொழும்பு)

ஓமானுக்கும் - இலங்கைக்கும் இடையில், சுற்றுலா தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கைக்கான ஓமான் தூதுவர் அஹமட் அலி சைட் அல் ரஷித் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னார்ண்டோ ஆகியோருக்கிடையில் குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுட்ளது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஊடாக ஓமானுக்கும் இலங்கைக்கும் இடையிலான சுற்றுலா ஒத்துழைப்பு வலுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (5-6)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர்
செல்வி. கீதா கைலாசபதி
அவர்களுடைய சகோதரன்

**அமரர். கைலாசபதி ஜெயகாந்தன்**

அவர்கள் 04.04.2024 நேற்றைய தினம் காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிராத்திக்கின்றோம். (C-0063)

ஆசிரியர் கழகம், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

## 4 ஆம் ஆண்டு நினைவலைகள்



துர்க்கா துரந்தரர்
அமரர்.
**சண்முகராஜா செந்தூரன்**

திதிபூர்வபக்க துவாதசி

அன்னை மடியில்
16.03.1970

அம்பாள் பாதங்களில்
05.04.2020

அன்னைக்கு அடுத்தபடியாக அம்பாளைத் தொழுது
அத்தனை பணிகளுக்கும் ஆதாரமாகத் திகழ்ந்து
தென்னம் பிள்ளை போல் தெல்லியில் உயர்ந்தீர்கள்
தேவியின் மனங்குளிரத் தொண்டுகள் செய்தீர்கள்
உங்களை யாரென்று அம்பாளுக்குப் புரிய வைத்தீர்கள்
தடுமாறிக் கூட தடக்கி விழாத எங்கள் குடும்ப விளக்குக்கு
என்னதான் நடந்தது? அம்பாள் உங்களை அழைத்த
காரணம் தான் என்னவோ! ஒன்றுமே புரியவில்லை.
எதற்கும் ஒரு தீர்ப்புண்டு! பொறுத்திருப்போம்.

(609)

துர்க்காபுரம்,
மல்லாகம்.

மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்,
ஆசையன்ரி, அண்ணி, பெறாமக்கள், மருமக்கள்.

## சைவத்திரு கா.சிவபாலன் அறக்கட்டளை

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



துர்க்கா துரந்தரர்
அமரர்.
**சண்முகராஜா செந்தூரன்**

அவர்களின் 4 ஆம் ஆண்டு
நினைவு தினத்தில்
அவர்களின் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கின்றார்கள்

(திதி: பூர்வபக்க துவாதசி)

தோற்றம்
16 . 03 . 1970

மறைவு
05 . 04 . 2020

துர்க்காதேவி தேவஸ்தானத்தில் சரியைத் தொண்டில்
ஈடுபட்ட வேளை அம்பாளின் பாதங்களில் சரணடைந்த
அமரர்.சண்முகராஜா செந்தூரன் அவர்களை சைவத்திரு.
கா.சிவபாலன் அறக்கட்டளை சார்பாக நினைவுகூர்வதுடன்
சைவத்திரு.கா சிவபாலன் அவர்களின்
அன்புக்குரியவரும் ஆன்மீகஅன்னை
கலாநிதி. சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்
பெறாமகனுமாகிய அமரர்.ச.செந்தூரன் அவர்கள் அம்பாளின்
பாதங்களில் அமைதி பெற பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



ஆயம்
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

சைவத்திரு.
கா.சிவபாலன் அறக்கட்டளை.

# இராசிபலன்

05.04.2024
பங்குனி 23, வெள்ளிக்கிழமை
ஏகாதசி முற்பகல் 10.01 மணிவரை

அவிட்டம் பிற்பகல் 3.01 மணிவரை
சுபநேரம் 6.08-7.38 மணிவரை
இராகுகாலம்-10.38 - 12.08 மணிவரை

சந்திராஷ்டமம்
திருவாதிரை, புனர்பூசம்,
ஏகாதசி விரதம்.

வளவன்

**மேஷம்**
ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**இடபம்**
சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும், தொழில் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களை சந்திப்பதில் மகிழ்வீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**மிதுனம்**
பகை விலகி பாசம் கூடும் நாள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், பயணங்கள் கைகூடும்.

**கடகம்**
நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**சிம்மம்**
தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி**
சுவாரஷ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**துலாம்**
கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், வளர்ச்சி கூடும் நாள், வங்கிச் சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், பெண் வழி ஒத்துழைப்பு கிடைக்கும்.

**விருச்சிகம்**
பணத்தேவைகளை நிறைவேற்ற நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**தனுசு**
நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபார விரோதம் விலகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மகரம்**
எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம்,


**கும்பம்**
வழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், தொழிலில் அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

**மீனம்**
உறவினர்களின் அன்புத் தொல்லைக்கு ஆட்பட நேரிடலாம், ஆலய வழிபாட்டில் ஆர்வம் கூடும், எப்படி நடக்கு மோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் உங்களைத் திங்கள் மதித்தால் மற்றவர்கள் மதிப்பார்கள்.

# அனலைதீவில் மின் உற்பத்திக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அனலை தீவு பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள சூரியக் கலங்கள் மற்றும் காற்றாலை மின் உற்பத்தி திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இந்திய நிறுவனத்தின் மின் பொறியியலாளர் தினேஷ் பாண்டியன் முன்னிலையில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.


இலங்கை இந்திய அரசுகள் ஏற்படுத்திக் கொண்ட இணக்கப் பாட்டுக்கு அமைய இந்திய தனியார் நிறுவனத்தின் நிதி உதவியுடன் மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளது. (5-6-33)

# ஆண்டு விழா

(சாவகச்சேரி)

கைதடி மத்தி உதயசூரியன் சனசமூக நிலையத்தின் 45 ஆவது ஆண்டு விழா நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7மணிக்கு உதயசூரியன் சனசமூக நிலைய முன்றலில் நிலையத்தின் தலைவர் வேலாயுதம் குகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (5-6-30)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல் துறையின். அரசறிவியல் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அரசறிவியலாளன் இதழ்-6 நூல் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது. (படம்:-சிவசாந்தன்)

# மஹோற்சவம்

(கரணவாய்)

துன்னாலை (வல்லியானந்தப் பிள்ளையார்) ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த மாதம் 30 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்ற நிலையில் நாளை மறுதினம் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை தேர்த் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை காலை தீர்த்த உற்சவம் நடைபெற்று அன்று இரவு கொடியிறக்கத்துடன் உற்சவங்கள் நிறைவடையவுள்ளது. (5-6-60)

# கண் பரிசோதனை முகாம்

(யாழ்ப்பாணம்)

கண்புரை சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய நோயாளர்களைப் பரிசோதனை செய்து தெரிவு செய்யும் கண் பரிசோதனை முகாம் நாளை சனிக்கிழமை காலை 8 மணிதொடக்கம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

இதில் தெரிவு செய்யப்படும் நோயாளர்களுக்கான கண்புரை சத்திரசிகிச்சை யாழ்.போதனா வைத்திய சாலையில் முற்றிலும் இலவசமாக செய்யப்படும்.

எனவே கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ள நோயாளர்கள் மேற்படி கண்பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி. ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (5-6)





# பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி சைவ வாலிப சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் நாளை 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை10மணிக்கு "திரு வடிநிழல்" மடாலயத்தில் நடைபெறும். (நி-5)

# சட்டவிரோதமாக மாடுகளை கடத்திய மூவர் யாழில் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சட்டவிரோதமான முறையில் மாடுகளை கடத்தி சென்ற குற்றச்சாட்டில் பொலிஸ் உத்தியோகஸ்தர் உள்ளிட்ட மூவர், நேற்று வியாழக் கிழமை அதிகாலை 3 மணியளவில் பொலிஸ் அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புங்குடுதீவு பகுதியில் இருந்து சட்டவிரோதமான முறையில், மாடுகளை கொடுமைப்படுத்தும் முகமாக வாகனம் ஒன்றில் 8 மாடுகளை கடத்தி வந்த நிலையிலையே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பண்ணை சுற்றுவட்ட பகுதியில் வீதி சோதனை நடவடிக்கையில் பொலிஸ் அதிரடிப்படையினர் ஈடுபட்டிருந்த வேளை, சந்தேகத்திற்கு இடமான முறையில் பயணித்த வாகனத்தினை வழிமறித்து சோதனையிட்ட போது, வாகனத்தினுள் கால்கள் கட்டப்பட்ட நிலையில், மாடுகள் காணப்பட்டுள்ளன.

விசாரணைகளின் போது, குறித்த மூவரும் புங்குடுதீவு பகுதிக்கு வாகனத்தில் சென்று மாடுகளை களவாடி அவற்றின் கால்களை கட்டி, கொடுமைப்படுத்தும் முகமாக வாகனத்தில் ஏற்றி வந்துள்ளமை தெரிய வந்துள்ளது.

அதனை அடுத்து மூவரையும் கைது செய்த அதிரடி படையினர், மாடுகள் மற்றும் வாகனத்தினையும் [illegible] சட்ட நடவடிக்கைக்காக [illegible] ஒப்படைத்துள்ளனர். (5-6-33)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 100 | 100 | 140 | 80-120 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 150 | 170 | 145 |
| பச்சைமிளகாய் | 180 | 160 | 150 | 200 | 150-180 |
| தக்காளி | 80 | 70 | 100 | 100 | 80-100 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 100 | 160 | 80-120 |
| கோவா | 200 | 200 | 200 | 240 | 200 |
| கரட் | 300 | 400 | 400 | 400 | 300 |
| பூசணி | 200 | 140 | 150 | 150 | 90-120 |
| புடோல் | 120 | 160 | 180 | 100 | 100 |
| வாழைக்காய் | 180 | 100 | 120 | 180 | 80-120 |
| சின்ன வெங்காயம் | 250 | 350 | 300 | 280 | 200-300 |
| பெரிய வெங்காயம் | 550 | 140 | 550 | 600 | 350 |
| பாகற்காய் | 350 | 300 | 300 | 240 | 200 |
| வெண்டக்காய் | 150 | 150 | 120 | 240 | 80-150 |
| கருணைக் கிழங்கு | 100 | 140 | 100 | 150 | -- |
| பயற்றங்காய் | 250 | 200 | 100 | 100 | 100-150 |
| லீக்ஸ் | 350 | 250 | 300 | 250 | 180 |
| பீற்றூட் | 200 | 200 | 200 | 240 | 200 |
| கறிமிளகாய் | 250 | 250 | 300 | 200 | 200-250 |
| முருங்கைக்காய் | 800 | 900 | 600 | 800 | 300-650 |
| போஞ்சி | 300 | 200 | 200 | 240 | 160 |
| கத்தரிதம்புள்ள | 100 | 70 | 100 | 120 | -- |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 50 | 80 | 40-60 |
| தேசிக்காய் | 300 | 300 | 350 | 400 | 200-300 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 130 | 100 | 80-120 | 50-110 |
| இராசவள்ளி | 400 | 450 | 400 | 400 | -- |
| வெங்காயப்பூ | --- | --- | 200 | 400 | -- |
| முள்ளங்கி | 80 | 100 | 120 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 80 | 60 | 80 |
| வல்லாரை | 60 | 40 | 50 | 80 | 80 |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபூமி முதியோர் இல்லம்
சுழிபுரம்

## 17 ஆவது ஆண்டு நிறைவு விழா

**காலம்**
07.04.2024 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.00 மணிக்கு

**இடம்**
சிவபூமி முதியோர் இல்லம்
"பாலசந்திரன் அரங்கு"

**தலைவர்**
கலாநிதி.ஆறு.திருமுருகன்
(தலைவர்-சிவபூமி அறக்கட்டளை)

**வரவேற்புரை**
திரு.ம.தயாகரன்
(இணைச் செயலர்-சிவபூமி அறக்கட்டளை)

**ஆசியுரை**
ஆன்மீகச்சுடர் ரிஷி.தொண்டுநாதன் சுவாமிகள்
(முதல்வர்-சுப்ரமுனிய கோட்டம்)

**பிரதம விருந்தினர்**
திரு.ந.விஜயசுந்தரம் தம்பதிகள்
(பிரதம ஆசிரியர்-வலம்புரி பத்திரிகை)

**இசை நிகழ்ச்சி**
"நெறியாள்கை"
திருமதி.வி.நரேந்திரா

**நடன ஆற்றுகை**
"நெறியாள்கை"
திருமதி.ஸ்ரீதேவி கண்ணதாசன்
(சந்திர பரத கலாலயம், பொன்னாலை)

**நன்றியுரை**
திரு.பு.ஸ்ரீவிக்னேஸ்வரன்
(செயலாளர்-சிவபூமி அறக்கட்டளை)

அனைவரும் வருகைதந்து
சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

சிவபூமி முதியோர் இல்லம்,
தொல்புரம், சுழிபுரம்
021 321 4230

சிவபூமி அறக்கட்டளை,
இலங்கை
021 222 7938

(348)


# விவசாய நவீன மயமாக்கல் சபையொன்றை நிறுவத் திட்டம்

(கொழும்பு)

விவசாயத் துறையுடன் தொடர்புடைய அமைச்சுக்கள், நிறுவனங்கள் மற்றும் விவசாய அமைப்புக்களை மறுசீரமைப்புச் செய்வதனை கண்காணிப்பதற் காக ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையில் விவசாய நவீன மயமாக்கல் சபையொன்றை நிறுவ உள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித் துள்ளார்.



ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவசாய நவீனமயப்படுத்தல் வேலைத்திட்டம் தொடர்பிலான மீளாய்வுக் கூட்டத்திலேயே ஜனாதிபதி. இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் விவசாயத் துறையை நவீனமயப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட கொள்கைத் திட்டம், அதனை தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் தலைவர் காமினி சேனாநாயக்கவினால் ஜனாதிபதியிடம் இதன் போது கையளிக்கப்பட்டது.

இந்த விவசாய நவீனமயமாக்கல் வேலைத் திட்டத்தை நடை முறைப் படுத்துவதற்காக 25 மாவட்டங்களின் 26 பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்து 26 திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு அவற்றுக்கான முன்னோடித் திட்டங்களை ஆரம்பிப்பதற்கான நிதி ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளது.

இந்த கலந்துரையாடலில் நெல் மற்றும் ஏனைய விவசாயப் பயிர்கள், பால் உற்பத்தி மற்றும் கால்நடை வளர்ப்பு உள்ளிட்ட விவசாயத்தின் பல தரப்பட்ட அம்சங்களையும் நவீன மயப்படுத்தல் மற்றும் மேம்படுத்துதல் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (5,6)


**லங்கா மஹால் (PVT) LTD**

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே
வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும்
கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி
செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**00919566156719**

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை
எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா,
மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974 (356)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



01.02.2024 அன்று BMICH
இல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில்
B.Ed பட்டம் பெற்ற
எமது பாடசாலையின் ஆசிரியை

**திருமதி.நிரோஜி பிரதீபன்**

அவர்களை வாழ்த்துவதுடன்
மென்மேலும் பல பட்டங்களைப் பெற
உளமார வாழ்த்துகின்றோம்.

(C-0064)

வாழ்த்துவோர்: ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/வரணி மத்திய கல்லூரி, வரணி.



# கல்யாணமாலை



## இடமாற்ற அறிவித்தல்

அன்பான வாடிக்கையாளர்களுக்கு

இலக்கம் 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம் எனும் முகவரியில்
இயங்கி வந்த கல்யாணமாலை
அலுவலகம் (துற்காலிகமாக)
இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
(பழைய வலம்புரி அலுவலகம்) எனும்
முகவரியில் இயங்கி வருகிறது என்பதை
அறியத்தருகின்றோம்.



மேலதிக தொடர்புகளுக்கு :
**021 720 1005**
**076 097 3120**


# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## WALK-IN-INTERVIEW
### Establishment of Library of Tamilology

A walk in interview for the post of **PROJECT ASSISTANT** on daily paid basis will be held on **16.04.2024 (Tuesday) at 9.30 am** at the Board Room of the University.

Qualifications:

I. Should have passed the G.C. E. O/L Examination in at least 06 subjects, including credit passes in Tamil, English Language and Mathematics.

**And**

II. Should have passed the G. C. E. A/L Examination with three credit passes.

**And**

III. Should have completed Diploma in Library and Information Science, Level – I.

**And**

IV. Should have IT literacy, especially in the areas of Electronic mailing, Word and Excel for office environment, Project management platforms.

**Age:** Applications should be less than 40 years of age.

**Salary:** Rs 1701.00 per day will be paid. Candidates are required to appear with relevant certificates, NIC and **self-prepared applications.**

**Registrar**

(c-0065)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# தன்னார்வத் தொண்டாளர்கள் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல் சம்பவம்

## அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கண்டனம்



(காசா)
மத்திய காசாவில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் தொண்டு நிறுவன பணியாளர்கள் 7 பேர் உயிரிழந்த சம்பவத்திற்கு அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளது.

கார் மீது வீசப்பட்ட குண்டு வெடித்ததில் அரசு சாரா தொண்டு நிறுவன மான வேர்ல்டு சென்ட்ரல் கிச்சன் அமைப்பின் வெளிநாட்டு பணியாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலையில் தொண்டு நிறுவன பணியாளர்கள் உயிரிழந்த விவகாரத்தில் தவறுதலாக தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இஸ்ரேல் இராணுவத்தின் லெப்டினன்ட் ஜெனரல் ஹெர்சி ஹலேவி கூறும்போது, உதவிப் பணியாளர்கள் உயிரிழந்தது வருத்தம் அளிக்கிறது. இந்த நிகழ்வு கடுமையான தவறு.

சிக்கலான சூழ்நிலைகளில் தவறாக அடையாளம் காணப்பட்டதன் விளைவாக இது ஏற்பட்டுவிட்டது. இது நடந்திருக்கக்கூடாது. இது தொடர்பாக முழுமையான விசாரணை நடத்தப்படும் எனத் தெரிவித்தார்.

இதற்கிடையே இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறும்போது, "இது ஒரு சோகமான சம்பவம். துரதிர்ஷ்டமானது மற்றும் திட்டமிடப்படாதது. ஆனால் போர் காலத்தில் இது போன்று நடக்கும்" என்றார்.

இந்நிலையில், உதவிப் பணியாளர்கள் கொல்லப்பட்டதற்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளதுடன். ஸ்பெயின் (Spain) மற்றும் போலந்தும் (Poland) ஆகிய நாடுகள் இஸ்ரேலிடம் விளக்கம் கேட்டுள்ளன.

மேலும், இந்த விவகாரத்தை உடனடியாக விசாரிக்க இஸ்ரேலை இங்கிலாந்து வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அமெரிக்க அதிபர் ஜோபைடன் கூறும்போது, "பொதுமக்களைப் பாதுகாப்பதில் போதுமான நடவடிக்கையை இஸ்ரேல் செய்யவில்லை" என்று குற்றம்சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# உக்ரைனுடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பின்லாந்து

(கீவ்)
பின்லாந்து உக்ரைனுடன் 10 ஆண்டு பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

மேலும் இராணுவ உதவியாக 188 மில்லியன் யூரோ அனுப்பப்படும் என்று பின்லாந்தின் ஜனாதிபதி அலெக்சாண்டர் ஸ்டப், உக்ரைன் ஜனாதிபதி வெலோடிமிர் ஜெலென்ஸ்கியை கீவில் சந்தித்த பின்னர் தெரிவித்தார்.

இந்த ஒப்பந்தம் பாது காப்பு, ஒத்துழைப்பு மற்றும் உக்ரைனின் பாதுகாப்பு மற்றும் இரண்டு வருட ரஷ்யாவின் படையெடுப்பிற்கு எதிரான பாதுகாப்பு மற்றும் உக்ரைனிய சீர்திருத்தங்கள் மற்றும் புனரமைப்புக்கான ஆதரவு உட்பட நீண்ட கால ஆதரவை உள்ளடக்கியது என்று ஸ்டப் அலுவலகம் தெரிவித்துள்ளது. (5-6)




# உக்ரைனு...

# பாரிய ...

## பிரான்ஸ் பாது...

(மொஸ்கோ)

"பிரான்ஸ் உ...
அனுப்பினால்...
பிரச்சினை...
போன்ற வி...
ரஷ்யாவின் ப...
பாதுகாப்பு அ...

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து இரண்டு வருடங்களுக்கு மேல் ஆகியுள்ள நிலையில் இந்தப் போரில் அமெரிக்கா உட்பட பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் உக்ரைனுக்கு உதவி செய்து வருகின்றன.

குறிப்பாக அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகள் உதவி வருகின்றன. உக் ரைனுக்... ஆயுதங்... பக்கபல... கின்றன...

இந்... ஜனாதி... மெக்ரோ... மாதம்... களின்... னுக்கு... டுவதை...

# உலக பாரம்பரிய சின்னங்களில் பெல்ஜியத்தின் பொம்மலாட்டம்

## இணைக்குமாறு பெல்ஜிய மக்கள் கோரிக்கை



(பெல்ஜியம்)
உலக பாரம்பரிய சின்னங்களின் பட்டியலில், தங்கள் நாட்டின் பொம்மலாட்டத்தை சேர்க்க வேண்டும் என பெல்ஜியம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். 19ஆம் நூற்றாண்டில் மிகவும்பிரபலமாகஇருந்த பொம்மலாட்டம், இன்றளவும்பெல்ஜியத்தில் நடைமுறையில் உள்ளதாக அந்நாட்டின் கலை மற்றும் பாரம்பரிய துறை செயலாளர் தெரிவித்தார்.

மேலும், பெல்ஜியம் தலைநகர் புருசெல்ஸ் நகரிலுள்ள சிட்டிஹால் முன்பாக, 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் மலர் கம்பள விரிப்பு நிகழ்ச்சியும் உலக அளவில் பிரபலம். ஆகையால் அதனையும் யுனஸ்கோ பட்டியலில் சேர்க்க வேண்டும் எனவும் கோரிக்கை [illegible] குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# ஒலியை விட வேகமாக...

## எறிகணையை சோதனையிட்ட...

(பியாங்யாங்)
ஒலியை விட வேகமாக செல்லும், திட எரிபொருள் ஏவுகணையை வெற்றிகரமாக சோதனையிட்டதாக வடகொரியா தெரிவித்துள்ளது.

வழக்கமாக திரவ ஹைட்ரஜன் மற்றும் ஒட்சிசன் எரிபொருளாக பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில், அலுமினியம் மற்றும் அமோனியம் பெர்குளோரேட் கலவையை எரிபொருளாக பயன்படுத்தும் இந்த ஏவுகணை, குறைந்த நேரத்தில் அதி வேகத்தை எட்டும் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இவற்றை கண்டறிவதும் கடினம் என கூறப்படுகிறது.

இதேவேளை வடகொரியா...



கடலில் ஏவுகணை சோதனை... நடத்தியதாகக் கூறி ஜப்பான், அமெ... ரிக்கா மற்றும் தென்கொரியா... கண்டனம் தெரிவித்துள்ளன...

இந்த ஏவுகணை சோத... னையை நேரில் பார்வையிட்ட...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# னுக்கு இராணுவ உதவிகளை வழங்கினால் விளைவுகளை சந்திக்க நேரிடும்

## பாதுகாப்பு அமைச்சரை எச்சரித்த ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர்

**கோ)**

**ஸ் உக்ரைனுக்கு இராணுவ வீரர்களை னால், பிரான்ஸ் தனக்குத் தானே னையை உருவாக்கிக் கொண்டதைப் விளைவுகளை சந்திக்க நேரும்" என ன் பாதுகாப்பு அமைச்சர், பிரான்ஸ் பு அமைச்சரை எச்சரித்துள்ளார்.**



ரைனுக்குத் தேவையான ஆயுதங்களைக் கொடுத்து பக்கபலமாக இருந்து வருகின்றன.

இந்நிலையில், பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மெக்ரோன் கடந்த பெப்ரவரி மாதம் மேற்கத்தேய நாடுகளின் துருப்புகள் உக்ரைனுக்கு அனுப்பி வைக்கப்படுவதை புறந்தள்ளி விட முடியாது என தெரிவித்திருந்தார். இதன் வாயிலாக தேவைப்பட்டால் பிரான்ஸ், உக்ரைனுக்கு இராணுவ வீரர்களை அனுப்பும் என்பதையும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சர் செர்கெய் சோய்கு, பிரான்ஸ் பாதுகாப்பு அமைச்சர் செபஸ்டியன் லெகோர்னு உடன் தொலைபேசியில் பேசியுள்ளார்.

அப்போது செர்கெய் "பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் ஏற்கனவே அறிவித்ததன்படி அதனை பின்பற்றினால் அது பிரான்ஸ் தனக்குத்தானே பிரச்சனையை உருவாக்கிக் கொள்வதாக அமையும்" என செபஸ்டியன் லெகோர்னுவிடம் எச்சரித்துள்ளார்.

மேலும், "உக்ரைன் மேற்கத்தேய நாடுகளின் அனுமதி இல்லாமல் எதையும் செய்வதில்லை, பிரான்ஸ் உக்ரைனுக்கு உதவுவதாக சிறப்பு வேலைகளில் ஈடுபடாது என நம்புகிறோம்" எனவும் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கு இடையிலான போருக்குப் பின்னர் மேற்கத்தேய நாடுகள் ரஷ்யாவுடனான தொடர்புகள் அனைத்தையும் துண்டித்துள்ள நிலையில் ரஷ்யா பாதுகாப்பு அமைச்சர் நீண்ட கால இடைவெளிக்குப்பின் பிரான்ஸ் பாதுகாப்பு அமைச்சருடன் மீண்டும் பேசியுள்ளார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திற்குப் பிறகு இரு நாட்டின் பர்துகாப்பு அமைச்ர்களும் முதன் முறையாகத் தற்போது பேசியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(5-6)

---

## ாக செல்லும் பிட்ட வடகொரியா



சோதனை ான், அமெ ர் கொரியா ள்ளன ா சோத வையிட்ட

வடகொரிய ஜனாதிபதி இந்த திட்டம் வெற்றியளித்துள்ளதாகவும் எங்களிடம் சிறந்த ஏவுகணை தொழில்நுட்பம் இருப்பதாகவும் தெரிவித்தார்.(5-6)

## இஸ்ரேல் மீது சைபர் தாக்குதல் எச்சரிக்கை விடுத்த ஈரான்

(ஜெருசலேம்)

இஸ்ரேலுக்கு எதிராக தொடர்ந்து மூன்று நாட்களுக்கு இணையத்தள தாக்குதல்களை நடத்தவுள்ளதாக ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

இதன்படி, இன்று opjerusalem என்ற ஹேஷ்டக் என்ற பெயரிலும் நாளை மறுதினம் OpIsrael என்ற ஹேஷ்டக் பெயரிலும் தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அந்த வகையில் இன்று முதல் 7 ஆம் திகதி வரை தொடர்ந்து 03 நாட்களுக்கு இணையத்தள தாக்குதல்கள் இடம் பெறவுள்ளது.




இஸ்ரேல் அரசுக்கு எதிராக, இந்த நாட்களில் இணையத்தள தாக்குதல்களை நடத்த வேண்டும் என்று உலகம் முழுவதும் இருந்து மக்களுக்கு ஈரான் அழைப்பு விடுத்துள்ளது.

இணையத்தளத்தில் இஸ்ரேலுக்கு எதிராக பாதிப்பை ஏற்படுத்த கூடிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும். இதன்படி வலைத்தளங்கள் திருடப்படுதல், குறுஞ் செய்திகள், தொலைபேசி அழைப்புகள், இ-மெயில்கள் வழியே போலியான செய்திகளை பரப்புதல் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகிறது.

மேலும், சமூக வலைத்தள இணைப்புகளை திருடுதல், நிறுவனங்களின் தகவல்களில் ஊடுருவுதல், தகவல்களை கசிய விடுதல், தாக்குதல்களை ஊக்குவிக்கும் வகையிலான செய்திகளை பரப்பி, பகிர்தல் போன்ற தேவையற்ற செயல்களும் ஒவ்வோர் ஆண்டும் இந்த காலகட்டத்தில் நடைபெறும்.

இதனை முன்னிட்டு இஸ்ரேல் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்கும்படி, அந்நாட்டின் தேசிய இணையத்தள இயக்குநரகம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதில், இஸ்ரேல் அமைப்புகள் மட்டுமின்றி, தனிநபர் மற்றும் பொது மக்கள் என பலரின் வலைத்தளங்கள், வலையமைப்புக்கள் போன்றவை இலக்குகளாக கொள்ளப்படும் என்றும் கூறப்படுகிறது.(5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகளவான இலங்கையர்கள் வெளிநாடுகளுக்கு பயணம்

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டின் முதல் 3 மாதங்களில் 74,499 இலங்கையர்கள் தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதாக, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

அவர்களில் 34,599 பேர் தொழிலுக்காக வெளிநாடு சென்ற பெண்கள் என்பதும் தெரியவந்துள்ளது.

ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலப்பகுதியில் தொழிலுக்காக வெளிநாடுகளுக்கு சென்ற ஆண் தொழிலாளர்களின் எண்ணிக்கை 39,900 எனவும், பெரும்பாலான இலங்கையர்கள் குவைத் நாட்டிற்கு தொழிலுக்காகச் சென்றுள்ளனர் எனவும் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 2024 ஆம் ஆண்டின் முதல் 3 மாதங்களில் மாத்திரம் தென்கொரியாவிற்கு 2,374 பேரும், இஸ்ரேலுக்கு 2,114 பேரும் இஸ்ரேலுக்கு ருமேனியாவிற்கு 1,899 பேரும் ஜப்பானுக்கு 1,947 பேரும் சென்றுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. (5-6)

# அரசாங்கம் மக்களிடையே மாயை ஒன்றை ஏற்படுத்த முனைகின்றது



(கொழும்பு)

இலங்கை, பொருளாதார முன்னேற்றத்தை அடைந்து வருவதாக அரசாங்கம் மக்கள் மத்தியில் மாயை ஒன்றை ஏற்படுத்த முனைவதாகவும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

இந்த வருட இறுதியில் இலங்கை 2.2 சதவீத பொருளாதார வளர்ச்சியை அடையும் என எதிர்பார்ப்பதாக அறிக்கை ஒன்றின் ஊடாக உலக வங்கி தெரிவித்திருந்தது.

குறித்த பொருளாதார வளர்ச்சி எதிர்பார்க்கையின் நடைமுறை சாத்தியம் தொடர்பில், ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் தேர்தல் ஒன்று நடக்கவிருப்பதால் பொருளாதாரம் வளர்ச்சியடைந்துள்ளதாக அறிவிக்க வேண்டிய கட்டாயத்தில் அரசாங்கம் உள்ளதாக தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த நிலையில் இருந்து மீள்வதாக மாத்திரமே காட்டப்பட்டுள்ளதாகவும் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீள்வதற்கான இடர்கள் நீங்கவில்லை எனவும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.கணேசமூர்த்தி சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# அஞ்சல் பொதியில் போதைப்பொருள் கடத்தல்

## மூவர் கைது

(கொழும்பு)

தென்னாபிரிக்காவில் இருந்து இலங்கைக்கு விமான அஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட கொக்கைன் பொதியை பெற்றுக் கொள்ள வந்த ஒருவர் உட்பட மூவர் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொல்கொடவத்தை விநியோக நிலையத்திற்கு வந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பொரளை பிரதேசத்தை சேர்ந்த இருபத்தைந்து வயதுடையவர் எனவும் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, இலங்கைக்கு கொக்கைன் போதைப்பொருளை இறக்குமதி செய்வதற்கு உதவிய மேலும் இரு சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (5-6)

# இன்று ஒரு தகவல் 85



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## பழிக்குப்பழி

பழிக்குப்பழி! இரத்தத்திற்கு இரத்தம்!

நமக்கெல்லாம் ரொம்பவும் பழக்கப்பட்டுப் போன வார்த்தைகள். காலம் அப்படி ஆகிவிட்டது. உயிருக்கு விலை ரொம்பவும் குறைந்து போய்விட்டது. மிருகம் எல்லாம் கூட ஒன்றோடு ஒன்று துப்பாக்கியாலே சுட்டுக் கொள்வது இல்லை. ஆனால் மனிதன் ஒருவனை ஒருவன் சுட்டுக்கொள்கின்றான். குத்திக்கொள்கின்றான். ஒரு மிருகத்திடம் இருந்து மனிதனை காப்பாற்றிக் கொள்வது சுலபம். ஆனால் மனிதனிடம் இருந்து மனிதனைக் காப்பாற்றிக் கொள்ளவது கஷ்டம்! எந்த நேரத்திலே என்ன செய்வான் என்று சொல்ல முடியாது.

பிறக்கும் போது நல்லா இருக்கின்ற மனிதன் போகப் போக ஏன் இப்படி ஆகிவிடுகின்றான். பொறுப்பாக கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கலாமா? வளர்முறை - வளர்கின்ற முறை இவையெல்லாம் தான் இதற்குக் காரணமாக இருக்கும் போல இருக்கின்றது.

கொஞ்ச நாளைக்கு முன்பு ஒரு பாட புத்தகம் பார்த்தேன்! முதல் வகுப்பிற்கான புத்தகம் என்று நினைக்கின்றேன். அதிலே ஒரு இடத்தை பார்த்ததும் எனக்கு சொரேர்ன் என்று ஆகிவிட்டது. ஏன் தெரியுமா? அதிலே வர்ணங்களைப் பற்றி அதாவது நிறங்களைப் பற்றி சொல்லிக் கொடுக்கின்ற பாடம்.

இலையின் நிறம் பச்சை என்று எழுதியிருந்தது. பக்கத்திலே பச்சை நிறத்திலே இலையின் படம் போட்டு இருந்தார்கள்.

இது சரி. அடுத்த படியாக இரத்தத்தின் நிறம் சிவப்பு என்று எழுதிப் போட்டிருந்தது. அதற்குப் பக்கத்திலே படம் எப்படி போட்டு இருந்தாங்க தெரியுமா? ஒரு கை விரல். அதை ஒரு கத்தி அறுக்குது. அதிலேயிருந்து சிவப்பாக இரத்தம் சொட்டுது. இது தான் அந்தப் படம். சிவப்பு நிறம் எப்படி இருக்கும் என்று சின்னப் பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்கின்றார்கள்.

இந்த விதமாக கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க. பிஞ்சு மனதிலே எப்படி நஞ்சைத் தூவுகிறார்கள் பார்த்தீர்களா? அந்தப் படத்தை பார்க்கின்ற சின்னப் பிள்ளைகள் சிவப்பு நிறம் எப்படி இருக்கும் என்பதை தெரிந்து கொள்ளுவதை விட சிவப்பு நிறத்தை பார்க்க வேண்டும் என்றால் கத்தியாலே விரலை வெட்டலாம் என்று தான் அதிகமாக தெரிந்திருக்கும். அதன் பிறகு ஏன் அவன் பெரிய பிள்ளையாக போனவுடனே கத்தியைத் தூக்க மாட்டான்?

இன்னமும் நாம் என்ன செய்கின்றோம் தெரியுமா? நமது பிள்ளைகளுக்கு விளையாட்டுத் துப்பாக்கியை வாங்கிக் கொடுத்து விட்டு வேடிக்கை பார்க்கின்றோம்! சுடுடா கண்ணா என்று சொல்லிக் கொடுக்கின்றோம்! தீபாவளி வந்து விட்டால் எத்தனை குழந்தைகள் துப்பாக்கியும் கையுமாக அலைவார்கள். இவன் ஏன் பெரியவனாக ஆனவுடனே தைரியமாக துப்பாக்கியைத் தூக்க மாட்டான்?

சின்னப் பிள்ளைகளுக்கு வீரத்தை ஊட்டுவது தப்பு இல்லை. வெறியை ஊட்டுவது தான் தப்பு. விளையாடுவதற்காக குழந்தைகளுக்கு பொம்மைகள் வாங்கினால் கூட கொஞ்சம் விவரத்தோடு வாங்கிக் கொடுக்க வேண்டியது பெரியவர்கள் பொறுப்பு. சின்ன வயதிலே நல்லதை சொல்லி வளர்த்தால் நாளைக்கு அவர்கள் நல்லவிதமாக இருப்பார்கள். எங்கட ஊர் பக்கத்திலே ஒரு பெரியவர் இருந்தார். வள்ளலார் பக்தர் அவர்.

அவர் எப்படி என்றால் கொலை என்கின்ற வார்த்தையைக் கூட தன் வாயாலே உச்சரிக்க மாட்டார். ஒரு தடவை ஏதோ ஒரு ஊரில் நடந்த கதையை பற்றி படித்து விட்டு அவரிடம் சொல்லிக் கொண்டு இருந்தேன். அப்ப அவர் என்ன சொன்னார்? தம்பி நம்ம ஊர் பக்கத்தில் கூட இப்ப நீ சொல்லி கொண்டு இருந்தியே அது நடந்து விடும் போல இருக்கு. என்றார். இது மாதிரி அவர் அந்த வார்த்தையை உச்சரிக்கிறதே பாவம் என்று நினைத்து கொண்டு இருந்தார்.

அப்படிப்பட்டவர்களும் அங்கே இருக்கத்தான் செய்கிறார்கள். இந்த காலத்திலே ஒரு பையனிடம் போய் டேய் தம்பி ஒரு கன்னத்திலே அடித்தால் மறு கன்னத்தையும் காட்ட வேண்டும் என்று சொன்னால் போங்க சேர் இன்னொரு கன்னத்திலும் அடி வாங்குவதில் உங்களுக்கு ஏன் அவ்வளவு ஆசை என்கிறான்.

பெரியவர்கள் எல்லாம் எதற்காக அப்படி சொல்லி வைத்தார்கள் என்று புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு போய் விட்டோம்.

நாலடியார் இருக்கே அதில் ஒரு பாட்டு. பெரியவர்களைப் பார்த்து சின்னவர்கள் ஏதாவது தப்பாக பேசி விட்டால் கூட அதற்காக அவர்கள் திருப்பி தப்பாக பேசிவிட மாட்டார்களாம். கீழ் மக்களுக்கு எதிராக ஒரு போதும் மேல் மக்கள் தாழ்வான சொற்களை பேச மாட்டார்கள் என்று அது சொல்கிறது. ஒரு நாய் நம்மை கடித்து விடுகிறது. அதுக்காக பதிலுக்கு அந்த நாயை கடிக்கிற மனிதர்கள் உண்டா என்று கேட்கிறது அந்த பாட்டு

**கூர்ந்து நாய் கௌவிக் கொளக்கண்டும் தம் வாயால்**
**பேர்த்து நாய் கௌவினார் ஈங்கில்லை- நீர்தன்றிக்**
**கீழ்மக்கள் கீழாய சொல்லியக்கால் சொல்பவோ**
**மேன் மக்கள் தம் வாயால் மீட்டு**

இது தான் அந்த நாலடியார். அதனாலே பழிக்கு பழி இரத்தத்திற்கு இரத்தம் இது எல்லாம் நமக்கு வேண்டாம். நாளைய தலைமுறைக்கும் இது வேண்டாம்.

ஒருத்தர் கேட்டாராம் அதோ அந்த ஆள் என்ன செய்து கொண்டு இருக்கிறார் என்று. அதுக்கு இன்னொருத்தர் சொன்னார் ஒன்றுமில்லை செருப்பு அவர் காலை கடித்து விட்டுதாம். அதனாலே பழிக்கு பழி வாங்குறேன் என்று சொல்லி கொண்டு இவர் அதை திரும்பக் கடித்து கொண்டு இருக்கிறார் என்று சொன்னார்.

இந்த காலத்தில் இப்படி நடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருந்தொகை பணம், 9 கிலோ கஞ்சாவுடன்
# வவுனியாவில் மூவர் கைது



(குருமன்காடு)

வவுனியா விசேட குற்றப் புலனாய்வு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் ரூ.பத்தொன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் பணம் மற்றும் 9 கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருளுடன் மூவர் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் குறித்த நபர்கள் கார் ஒன்றில் போதைப் பொருளை கடத்திச்செல்ல முற்பட்டுள்ளனர். இந்நிலையில் அதனை வழிமறித்த பொலிஸார் சோதனையில் ஈடுபட்ட வேளை குறித்த காரினுள் ஒன்பது கிலோ கிராம் கஞ்சா மற்றும் பத்தொன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் பணமும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா, நெடுங்கேணி, ஒட்டுசுட்டான், ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 34, 27, 25 வயதுடைய நபர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(5-6-250)

# மனித புதைகுழி வழக்கு மே மாதம் ஒத்திவைப்பு

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி வழக்கானது எதிர்வரும் மே மாதம் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கானது நேற்று முல்லைதீவு மாவட்ட நீதிமன்றத்தில் விசார்ணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இவ்வாறு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கில் மனித உரிமைகள் சட்டத்தரணி கே. ரீ. நிரஞ்சன் மற்றும் சட்ட வைத்திய அதிகாரி கே.வாசுதேவா மாவட்ட செயலக கணக்காளர் காணாமல் போனவர்களுக்கான அலுவலக பிரதிநிதிகள் உள்ளிட்டவர்கள் பிரசன்னமாகியிருந்தனர்.


இதன் போது மாவட்ட செயலக பிரதிகளால் குறித்த அகழ்விற்குரிய நிதிகள் முழுமையாக விடுவிக்கப்பட வில்லை என மன்றில் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து நிதி தொடர்பான விடயங்களுக்காக இவ் வழக்கானது எதிர்வரும் மே மாதம் 16 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(5-6-299)

# வவுனியாவில் இடம்பெற்ற சித்திரைக் கலை விழா





(குருமன்காடு)

வவுனியா மாவட்ட கலாசார அதிகாரசபை நடத்தும் சித்திரைக் கலைவிழா நேற்று கோலாகலமாக ஆரம்பமாகியது.வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை அதிதியாக கலந்து கொண்ட மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர நிகழ்வை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இதில் மாவட்ட கலாமன்றங்களின் கண்காட்சிக் கூடங்கள், மாணவர்களின் சித்திரக் கண்காட்சி, சமுர்த்தி பயனாளிகளின் விற்பனை மற்றும் கண்காட்சி நிலையங்கள், உள்ளூர் உற்பத்தியாளர்களின் காட்சிப்படுத்தல்கள் மற்றும் வடக்கு நெடுங்கேணி வெடுக்கு நாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் காட்சிப்படுத்தப்பட்டதுடன், புதூர் நாகதம்பிரான் கோவிலும் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததுடன் இராணுவம் மற்றும் பொலிஸ் பிரிவுகளின் சாகச நிகழ்வுகளும் இடம் பெற்றது.

இதேவேளை குறித்த நிகழ்வு இன்றைய தினமும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(5-6-250)

# ஏல விற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் எதிர் வரும் 8 ஆம் திகதி திங்கட் கிழமை காலை 8.30 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் பகிரங்கமாக 57 கியூப் மணலின் ஏல விற்பனை நடைபெறவுள்ளது என கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார்.

(5-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3081


அட்சரன்




கதிர்




கஸ்தூரி




கார்த்திக்




லக்சனா




கபிலா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் [illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் [illegible] facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 447





"இராஜ குலத்தில் பிறந்த தினால் என்ன? நல்ல வேளையாகக் கடவுள் என்னை இந்த தண்டனைக்கு உள்ளாக்க விரும்பவில்லை. இராஜ்யம் ஆளுவதற்கு என் மூத்த சகோதரர் இருக்கிறார் என் பெரிய பாட்டனாரின் மகன் ஒருவரும் இருக்கிறார். அவரும் இராஜ்யம் ஆள ஆசைப்படுகிறார்."

"ஆகா! அது தங்கள் காதுக்கும் எட்டிவிட்டதா?" என்றாள் பூங்குழலி.

"நல்ல கதை! எனக்குத் தெரியாது என்று நினைத்தாயா என்ன? ஆகையால் தஞ்சாவூர்ச் சிம்மாசனம் அதன் பேரில் உட்காருவதற்கு ஆள் இல்லாமல் தவிக்கப் போவதில்லை. அத்துடன் எனக்குக் கிரீடம் சுமந்து ஆளும் இராஜ்ய ஆசையும் இல்லை!"

"தங்களுக்கு எதிலேதான் ஆசை?" என்று கேட்டாள் பூங்குழலி.

"அப்படிக் கேள், சொல்லுகிறேன்! சற்றுமுன் இந்த மத்த கஜத்தின் மீது உட்கார்ந்து பிரயாணம் செய்தோமே? அம்மாதிரி வனங்கள் வனாந்தரங்கள் எல்லாம் புகுந்து சண்டமாருதம் போல் சுற்றி வருவதில் எனக்கு ஆசை. கப்பல்களில் ஏறிக் கடல்களைக் கடந்து செல்வதில் ஆசை. உயரமான மலைகளின் உச்சிச் சிகரங்களின் மேல் ஏறுவதில் ஆசை. கடல்களுக்கு அப்பால் இந்த இலங்கையைப் போல் எத்தனையோ இலங்கைகளும், பாரதகண்டத்தைப்போல் எத்தனையோ பெரிய பெரிய கண்டங்களும் உண்டு என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அங்கேயெல்லாம் போய் அந்தந்த நாடுகளில் உள்ள அதிசயங்களைப் பார்க்க வேண்டும் என்று ஆசை!"

இளவரசர் கூறும் மொழிகளை அப்படியே விழுங்குவாள் போல் பூங்குழலி வாயைத் திறந்தபடி கேட்டுக் கொண்டிருந்தாள். ஆர்வம் கட்டுக் கடங்காமல் போகவே, "ஐயா! அங்கேயெல்லாம் போகும் போது என்னையும் அழைத்துப் போவீர்களா?" என்று கேட்டாள்.

"நான் சொன்னவையெல்லாம் என் ஆசைகள். அவை நிறைவேறப் போகின்றன என்று யார் கண்டது?" என்றார் இளவரசர்.

பூங்குழலி கனவு லோகத்திலிருந்து பூலோகத்துக்கு வந்தாள். "ஐயா! அப்படியானால் தாங்கள் எதற்காக இப்போது தஞ்சாவூருக்குப் போக வேண்டும்?" என்றாள்.

"அதைச் சொல்லத்தான் ஆரம்பித்தேன். அதற்குள் நீ பேச்சை மாற்றி எங்கேயோ கொண்டுபோய்விட்டாய். சமுத்திரகுமாரி! இந்த இலங்கைத் தீவில் வாய்திறந்து பேசும் சக்தியற்ற ஊமை ஸ்திரீ ஒருத்தி அங்குமிங்கும் சித்தப்பிரமை கொண்டவள் போல் சுற்றிக் கொண்டிருக்கிறாளே? அவளை உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார் இளவரசர் அருள்மொழி வர்மர்.

அவள் ஆர்வம் ததும்பிய அகன்ற கண்களினால் அரசிளங்குமாரரை நோக்கினாள்.

"சமுத்திரகுமாரி! உண்மையாகச் சொல்! உன்னை வாழ்நாளெல்லாம் ஒரு சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கும்படி சொன்னால் உட்கார்ந்திருப்பாயா?" என்று இளவரசர் கேட்டார்.

பூங்குழலி சிறிது நேரம் யோசனை செய்தாள். பின்னர், "மாட்டேன்!" என்று தெளிவாகச் சொன்னாள்.

"பார்த்தாயா? பின்னே என்னை மட்டும் அந்தத் தண்டனைக்கு ஏன் உள்ளாக்கி விரும்புகிறாய்?"

"தாங்கள் இராஜ குலத்தில் பிறந்தவர் அல்லவா?"

பூங்குழலி அடங்கா வியப்புடன், "தெரியும், இளவரசே! எதற்காகக் கேட்கிறீர்கள்?" என்றாள்.

"காரணம் பிறகு சொல்லுகிறேன். அந்த ஸ்திரீயை உனக்கு எப்படித் தெரியும்? அவளைப் பற்றி என்ன தெரியும்?" என்று கேட்டார்.

"ஐயா! நான் குழந்தை வயதில் என்னைப் பெற்ற தாயை இழந்தேன். பிறகு எனக்கு அன்னையின் அன்பை அளித்தவள் அந்த மூதாட்டிதான். அவள் என் குரு என் தெய்வம், அவளைப் பற்றி வேறு என்ன கேட்கிறீர்கள்?"

"அந்த மூதாட்டிக்கு நிரந்தரமான வாசஸ்தலம் ஏதாவது உண்டா? எப்போதும் சுற்றித் திரிந்து கொண்டேயிருப்பவள்தானா?"

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## ஓவியத்தின் விலை



கபாலிபுரம் என்ற மாநகரில் கபிலன் என்ற ஓவியன் இருந்தான். ஓவியம் வரைவதில் மிகுந்த திறமை உடையவன். யாரைப் பார்த்தாலும் அவர்களை அப்படியே ஓவியம் வரைந்து விடுவான். ஓவியத்திற்கும் அந்த ஆளுக்கும் சிறு வேறுபாடு கண்டுபிடிக்க முடியாது. அவ்வளவு பொருத்தமாக ஓவியம் வரைவான்.

பணக்காரர்களை ஓவியமாக வரைந்து கொடுப்பான். அந்த ஓவியத்தை நல்ல விலை கொடுத்து வாங்குவர். அதைத் தங்கள் வீட்டில் அழகாக மாட்டி வைப்பர்.

அந்த ஊரில் ராஜன் என்ற செல்வன் இருந்தான். யாருக்கும் எதையும் தராத கருமி அவன். அவனுடைய பிறந்த நாள் விழா வந்தது. நிறைய உறவினர்கள் விழாவிற்கு வந்திருந்தனர். ராஜனின் இயல்பை அறியாத கபிலன் அந்த விழாவிற்குச் சென்றான்.

ராஜனை வணங்கிய அவன், "ஐயா! நான் சிறந்த ஓவியன். உங்களை அப்படியே ஓவியமாக வரைந்து தருகிறேன். உங்களையே நேரில் பார்ப்பது போல இருக்கும். அதை வரவேற்பு அறையில் அழகாக மாட்டி வைக்கலாம். அந்த ஓவியத்திற்கு எவ்வளவு பணம் தருவீர்கள்?" என்று கேட்டான்.

'உறவினர்கள் தன்னைப் பெருமையாக நினைக்க வேண்டும். பிறகு பணம் தராமல் இவனை ஏமாற்றலாம்' என்று நினைத்தான் ராஜன்.

"நீ வரையும் ஓவியம் என்னைப் போலவே இருக்க வேண்டும். அப்படி இருந்தால் ஆயிரம் பணம் தருகிறேன். இல்லாவிட்டால் பணம் எதுவும் தரமாட்டேன்," என்றான்.

"உங்களைப் போலவே ஓவியம் வரைந்து ஒரு வாரத்தில் தருகிறேன். குறை ஏதும் இருந்தால் பணம் தர வேண்டாம்," என்றான் ஓவியன்.

ராஜனைப் போலவே ஓவியம் வரைந்து எடுத்து வந்தான். அந்த ஓவியத்தை மேலும் கீழும் பார்த்தான் ராஜன்.

"இந்த ஓவியம் என்னைப் போலவா இருக்கிறது? நீயே பார். இவ்வளவு நரையா என் தலையில் உள்ளது? என்னைக் கிழவனாக்கி விட்டாயே நான் இருப்பது போல இளமையாக ஓவியத்தை வரைந்து கொண்டு வா," என்றான்.

அந்த ஓவியத்தை எடுத்துச் சென்றான் கபிலன். அதில் சில மாற்றங்கள் செய்தான். அந்த ஓவியத்தை மீண்டும் ராஜனிடம் கொண்டு வந்தான்.

"என்னைத் தானே ஓவியம் வரையச் சொன்னேன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும்.
– யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## போதைவஸ்து விடயத்தில் பெற்றோர் விழிப்படைய வேண்டும்

மாணவர்களிடையே மீண்டும் போதைவஸ்துப் பாவனை அதிகரித்துள்ளதான தகவல்கள் மிகுந்த வேதனையைத் தருவதாகும்.

ஏலவே மாணவர்களிடையே போதைவஸ்துப் பாவனை அதிகரித்திருந்தபோது, அது விடயத்தில் எமது நீதிமன்றங்கள் அதீத கவனம் செலுத்தியதன் காரணமாக அந்த கொடுஞ் செயல்கள் தடுக்கப்பட்டன.

இவ்வாறு நீதிமன்றங்கள் மிகவும் இறுக்கமாக இருந்ததன் காரணமாக எங்கள் தமிழ்ப் பிரதேசங்களில் போதைப்பொருள் பாவனை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

ஆனால் போதை வியாபாரிகள் இன்னமும் தங்களின் கொடுமையைக் கைவிடவில்லை என்பதை மீண்டும் நிரூபித்துள்ளனர்.

ஆம், எங்கள் அருமந்த பிள்ளைகளிடம் போதைப்பாவனையை ஏற்படுத்த அந்த வஞ்சகர் கூட்டம் சதா முயற்சித்துக் கொண்டே இருக்கிறது.

அந்தப் பிஞ்சுகளிடம் போதைப்பாவனையை பரப்புவதன் மூலம் தங்களின் போதை வியாபாரத்தை நடத்துவது அந்தக் கொடியவர்களின் நோக்கம்.

இத்தகையவர்களால் எங்கள் அருமந்த பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகப் போவதை நினைக்கும்போது இதயம் வெடித்துப் போகும்போல் உள்ளது.

ஆம், போதைப் பாவனை அதிலும் மாணவர்கள் மத்தியில் போதைப் பாவனையை பரப்புவதை எவரும் சாதாரணமான விடயமாக நினைத்துவிடாதீர்கள். அது மிகப்பெரும் ஆபத்தையும் அழிவையும் ஏற்படுத்தவல்லது.

அதேநேரம், இனி இந்த மண்ணில் வாழ முடியாது என்ற வெறுப்பு நிலைமைகளை உருவாக்கி தமிழர் பிரதேசங்களில் இருந்து மக்கள் வெளியேறுகின்ற மிக மோசமான சூழலையும் ஏற்படுத்தும்.

இதற்கும் மேலாக, கடந்த காலத் தரவுகளை ஆராயும்போது அதீத போதைப் பாவனையால் உயிரிழந்த இளைஞர்களையும் தங்கள் உயிரை மாய்த்த இளைஞர்களையும் கணக்கெடுத்தால் மிக அதிர்ச்சியான தகவல்களே நமக்குக் கிடைக்கும்.

எனவே போதைப் பாவனையை முழுமையாக இல்லாதொழிப்பதில் அனைத்து தரப்பினரும் பரிபூரணமான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

அதிலும் குறிப்பாக, பாடசாலை நிர்வாகம் ஒவ்வொரு மாணவரையும் கண்காணிப்பதில் – அவர்களின் நடத்தைகளை அவதானிப்பதில் அதீத கவனம் செலுத்துவது அவசியம்.

இதையும் கடந்து, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு அறிவுரை கூறி அவர்களைத் தங்களின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதும் கட்டாயமானது.

அதிலும் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு மிகச் சிறந்த நண்பர்களாக இருக்க வேண்டும். அப்போதுதான் வெளிச் சூழலில் தமக்கு நடக்கின்ற விடயங்களை பிள்ளைகள் தமது பெற்றோரிடம் எடுத்துக் கூறுவர்.

ஆகையால் ஒவ்வொரு பெற்றோரும் தம் பிள்ளைகளின் உற்ற நண்பர்களாக இருக்க வேண்டும். அது ஒன்றுதான் உங்கள் பிள்ளைகளை கயவர்களிடம் இருந்து காப்பாற்றும்.

# சமுர்த்தி சங்கத்திற்கு தற்காலிகமாக விசேட குழு நியமிக்க அமைச்சர் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் சமுர்த்தி சங்கத்தின் செயற்பாடுகள் வினைத்திறனற்ற வகையிலும் தூர நோக்கற்ற குறுகிய செயற்பாடுகளுடனும் இருந்து வருகின்றமையால் எந்த நோக்கத்திற்காக சமுர்த்தி திட்டம் கொண்டு வரப்பட்டதோ அதை முழுமையான இலக்கை நோக்கி கொண்டு செல்வதற்காக தற்காலிகமாக விசேட குழு ஒன்று நியமிக்கப்படுவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் சமுர்த்தி வேலைத் திட்டங்களை சமூக வலுவூட்டலை நோக்கி முன்னெடுக்கும் நோக்கில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனைக்கு அமைய நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போது சமுர்த்தி உத்தியோகத்தர்களால் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்ட நிலையில் அமைச்சரால் இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

குறித்த குழு துரிதமாக பிரதேச ரீதியான கட்டமைப்பை உருவாக்கி சமுர்த்தி திணைக்களத்தினை வினைத்திறனாக கொண்டு நடத்துவதற்கும் மக்களுக்கு தேவையான சேவைகளை தடையின்றி வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சரால் அறிவுறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(5-6-33)

## வாய் புற்றுநோயால் மூவர் உயிரிழப்பு

(கொழும்பு)

இலங்கையில் வாய் புற்று நோயினால் தினமும் மூன்று பேர் உயிரிழப்பதாக மஹரகம வாய் சுகாதார நிறுவனத்தின் விசேட வைத்திய நிபுணர் நிலந்த ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

வாய் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயலமர்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே வைத்திய நிபுணர் நிலந்த ரத்நாயக்க இதனைத் தெரிவித்தார்.

அத்துடன் நாளாந்தம் சுமார் 6 வாய் புற்று நோயாளிகள் கண்டறியப்படுவதாகவும் இலங்கையில் 5 வயதுடைய குழந்தைகளில் 63 வீதமானோர் பற்கள் சிதைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் பெரும்பாலான இளம் பிள்ளைகள் இரவு உறங்கச் செல்வதற்கு முன் பல் துலக்குவதில்லை என பாடசாலை சுகாதார ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளதாக விசேட வைத்திய நிபுணர் நிலந்த ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.(5-6)

## மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த விரிவான வேலைத்திட்டம்

### அதிகாரிகளுக்கு ரணில் பணிப்பு

(கொழும்பு)

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு விடுமுறையின் போது அத்தியாவசிய சேவைகள் மற்றும் ஏனைய அரச சேவைகளை தொடர்ந்தும் பேணுவதற்கான முறையான வேலைத்திட்டத்தை தயாரிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதன்படி ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம், பாதுகாப்பு, சுகாதாரம், போக்குவரத்து மற்றும் மின்சாரம் ஆகிய அமைச்சுகள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை தயாரிக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

அத்துடன் சிங்கள தமிழ் புத்தாண்டின் போது, நாட்டில் பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, சட்டம் ஒழுங்கை பாதுகாக்கும் வகையில் விரிவான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி பாதுகாப்பு தரப்பினருக்கு பணிப்புரை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (5-6)

### கச்சதீவு விவகாரம்

## முன்னரே தீர்க்கப்பட்ட ஒரு விடயம்

## மீள் பரிசீலனை அவசியம் இல்லை

### அலி சப்ரி

(கொழும்பு)

கச்சதீவு விவகாரம் 50 ஆண்டுகளுக்கு முன்னரே தீர்க்கப்பட்ட ஒரு விடயம் என்பதால் அதனை மீள்பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இடம்பெறவுள்ள மக்களவைத் தேர்தலை இலக்காகக் கொண்டு, கச்சதீவு விவகாரம் தற்போது பேசு பொருளாக மாறியுள்ளது.

இந்த நிலையில், பாரதிய ஜனதா கட்சியின் தமிழகத் தலைவர் அண்ணாமலை காங் கிரஸ் ஆட்சியின் போது, இலங்கைக்கு இந்தியா, கச்சதீவினை தாரைவார்த்திருந்ததாக தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஊடாக பெறப்பட்ட தகவலுக்கு அமைய, சர்ச்சைக்குரிய கருத்தினை வெளியிட்டிருந்தனர்.

அதனை இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர், நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் உள்ளிட்ட முக்கிய தரப்பினரும் மேற்கோள்காட்டி காங்கிரஸ் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவற்றின் ஆட்சியை விமர்சித்திருந்தனர்.

இந்த நிலையில், அதற்கு பதிலளிக்கும் வகையில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி குறித்த விவகாரம் 50 ஆண்டுகளுக்கு முன்னரே தீர்க்க ப்பட்ட விடயம் என்பதால், அதனை மீள் பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என குறிப்பிட்டுள்ளார். (5-6)

## சட்டவிரோத மீன்பிடி செயற்பாடுகளை தடுப்பதற்கான அறிக்கையை சமர்ப்பியுங்கள்

(கொழும்பு)

வடக்கில் இடம்பெறுகின்ற இந்திய மீனவர்களின் அத்து மீறிய மீன்பிடி உள்ளிட்ட சட்டவிரோத மீன்பிடி செயற்பாடுகளைத் தடுப்பதற்கான பரிந்துரைகள் [illegible] பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைத் தணித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வை குழு, கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தியுள்ளது. பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைத் தணித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வை குழு, அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட தலைமையில் அண்மையில் கூடியது.

இந்த கூட்டத்திற்கு வடக்கு, கிழக்கை சேர்ந்த மீன்பிடி சமூகத்தினர் மற்றும் கடற்றொழில் அமைச்சின் செயலாளர், கடற்றொழில் அமைச்சின் கீழுள்ள அரசாங்க நிறுவனங்களின் தலைவர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் அழைக்கப்பட்டிருந்தனர்.

வடக்கு கடற்பரப்பிற்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து மேற்கொள்ளும் சட்ட விரோத மீன்பிடியால் தமது வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக வடபகுதி மீனவ பிரதிநிதிகள் இதன் போது சுட்டிக்காட்டினர். (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் ஆங்கிலேயர் ஆட்சிக் கால முற்பகுதி (1796–1832)

பகுதி IV

01

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் என்ற தொடர் கட்டுரையின் முதற் பகுதியில் விஜயன் வருகையிலிருந்து பொலநறுவையுகம் முடியும் வரையான காலம் அலசப்பட்டது. இரண்டாவது பகுதியில் பொலநறுவை யுகத்திற்குப்பின் கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சி வரையான காலம் அலசப்பட்டது. இதன் மூன்றாவது பகுதியில் போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் ஆட்சிக்காலங்கள் அலசப்பட்டன. இது அத் தொடரின் நான்காம் பகுதியாகும்.

பிரித்தானியர் இலங்கையை ஆட்சி புரிந்த காலத்தினை மூன்று பெரும் பிரிவுகளாகப் பகுக்கலாம். 1796 முதல் 1832 வரையுள்ள பகுதி முதற் பகுதியாகும். இக் காலத்தில் ஆங்கிலேயர், தமது ஆட்சியை உறுதியாகத் தாபிக்கவும் பரிபாலனத்தை வலுப்படுத்தவும் முயன்றனர்.

இரண்டாவது பகுதியான 1832 தொடக்கம் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரையுள்ள காலத்தினை, இலங்கையின் விருத்திக் காலமெனக் கூறுவர். இவ்வாண்டுகளில் இலங்கை பல வழிகளிலும் துரிதமாக முன்னேறியது. விசேடமாக, பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை பரந்து, நாட்டின் பொருளாதாரத்தைப் புரட்சிகரமாக மாற்றியது. பொருளாதார மாற்றங்கள் சமூக, நிர்வாக மாற்றங்களுக்கு வழிகாட்டின.

மூன்றாவது பகுதி, இருபதாம் நூற்றாண்டுடன் மலர்ந்தது. இக் காலத்தில் ஆங்கிலேயரின் கைகளிலிருந்து நடுவகுப்பினர் அரசியலதிகாரத்தைப் படிப்படியாகக் கைப்பற்றினர். வெகுவிரைவில் இவ்வதிகாரம் பாமர மக்களின் கைகளுக்கு மாறவே, இலங்கை சுதந்திரமும் பெறலாயிற்று.

**ஆங்கிலேயர் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றல்**

1789 ஆம் ஆண்டு பிரான்சில் உண்டான புரட்சியின் விளைவாகத் தோன்றிய சில சம்பவங்களே, இலங்கையின் ஆட்சியில் மிகவும் முக்கியமான மாற்றமேற்படுத்துவதற்கு மறைமுகமாக வித்திட்டன. 1794 இல் பிரெஞ்சுப் படைகள் ஐரோப்பிய நாடுகளின் மேல் படையெடுக்க ஆரம்பித்த வேளையில், ஜெனரல் பிச்சேக்று, ஒரு புரட்சிப் படையினை ஒல்லாநதினுள் வழி நடத்திச் சென்று அந்நாட்டினை வெற்றி கொண்டான். ஒல்லாந்து தேசத்தின் அரசன் ஐந்தாம் வில்லியம் முடியைத் துறந்து, தப்பியோடி, இங்கிலாந்தில் தஞ்சம் புகுந்தான். பிரெஞ்சுப் புரட்சியின் கருத்துக்களை வெகுவாகப் பாராட்டிய ஒல்லாந்த "தேசாபிமானிகள்" பிரெஞ்சுப் படைகளுடன் ஒன்று சேர்ந்து நெதர்லாந்துக் குடியரசினை அமைத்தனர்.

ஒல்லாந்து தேசம் "பற்றேவியக் குடியரசு" என்ற நாமத்துடன் பிரெஞ்சு நாட்டின் ஒரு பகுதியாக இணைக்கப் பெற்றது. ஏனைய ஐரோப்பிய நாடுகளும் இங்கிலாந்தும் ஒல்லாந்த புரட்சிக்காரருக்கு எதிராகப் போர் தொடுத்தனர். ஒல்லாந்து அடிபணிந்ததன் பயனாக அதன் குடியேற்ற நாடுகள் பிரெஞ்சினருடன் இணைந்துவிடுமெனப் பிரித்தானியர் அஞ்சினர். ஒல்லாந்த குடியேற்ற நாடுகளுள் முக்கியமானவையான தென்னாபிரிக்க முனையையும் இலங்கையையும் கைப்பற்றுவதற்குப் படைகளை அனுமதிக்க கட்டளைகள் அனுப்புமாறு வில்லியத்தை ஆங்கிலேயர் தூண்டினர்.

புரட்சிப் போரின் முடிவில் தானிழந்த அரசையும் குடியேற்ற நாடுகளையும் ஆங்கிலேயர் மீட்டுத் தருவர் என்ற நம்பிக்கையினால் உந்தப்பட்ட வில்லியம், ஆங்கிலேயரின் வேண்டுகோளுக்கிசைந்தான். அவன் இலங்கை, பிரெஞ்சினரின் கைகளில் சிக்காமலிருப்பதற்கு டச்சு ஆள்பதி வான் அங்கில்பீக் என்பானுக்கு ஆங்கிலப் படைகளையும் கப்பல்களையும் நாட்டினுள் அனுமதிக்கவும் நிர்வாகத்தை அவர்களிடமே ஒப்படைக்கவும் 1795 பெப்ரவரி 7இல் ஒரு கட்டளையை வரைந்தனுப்பினான்.


1795யூலையில் ஹோபாட் பிரபுவிடமிருந்து கடிதத்துடன் வந்த மேஜர் அக்னியூ ஸ்ராட்றஹோல்டரின் ஆணைப்படி பிரித்தானிய துருப்புக்கள் இலங்கைக்கு அனுப்பப்படுமென்றும் அவை இங்கு அனுமதிக்கப்படாவிடின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும் கூறி நின்றான். அங்கில்பீக், வில்லியத்தின் கட்டளையின் பிரகாரம் 800 ஆங்கிலேயப்படை வீரரை அனுமதிக்கத் தான் தயாரென்றும், ஆனால் நாட்டின் நிர்வாகத்தை ஆங்கிலேயரிடம் ஒப்படைக்க அக்கடிதம் கட்டளை இடவில்லையென்றும் பதிலிறுத்தான்.

**திருமலையில் ஆங்கிலேயர்:**

இப்பதிலை ஏற்றுக்கொண்ட ஹோபாட் பிரபு 300 ஆங்கிலேயரையும் இந்தியச் சிப்பாய்களையும் கொண்ட ஒரு படையினை, தளபதி ஸ்ருவட்டின் கீழ், இலங்கைக்கு அனுப்பி வைத்தான். அது திருகோணமலையை 1795 ஒகஸ்ட் முதலாம் நாளன்று வந்தடைந்த பொழுது திருகோணமலையின் டச்சுத் தளபதியான போண்போவர் அதனைக் கோட் டையினுள் அனுமதிக்க முடியாதென மறுத்துவிட்டான்.

கொழும்பு ஆள்பதி அங்கில்பீக்கின் கடிதம் அவனுக்குக் கொடுக்கப்பட்ட பொழுது, அதில் அவன் ஒரு நுணுக்கமான பிழையைக் கண்டு தான் மேலதிகாரிகளிடமிருந்து புதுக் கட்டளையைப் பெறும் வரை ஆங்கிலேயரை அனுமதிக்க மீண்டும் மறுத்தான். திருமலையைப் போரின்றி அமைதியாக வெற்றி கொள்ள நினைத்த ஆங்கிலேயர், போண்போவர் கொழும்பினின்று மறுமொழியினைப் பெறும் வரை கோட்டையைத் தாக்கும் முயற்சியைப் பிற்போட்டனர்.

இவ்விதமாக திருமலையின் ஜெனரல் பிச்சேக்று ஆங்கிலேயரைத் தாமதம் செய்து வந்த இடைவேளையில் கொழும்பின் மேலதிகாரிகள் அவர்களை அனுமதிக்கும் விடயத்தைப் பற்றி மனம் மாறினர். பிரெஞ்சினர் ஒல்லாந்தரின் மேல் படையெடுத்து ஸ்ரட்ற் ஹோல்டரைத் துரத்தி விட்டு மக்களின் விருப்பங்களுக்கு மாறாகப் பலாத்காரம் கொண்டே புதுக்குடியரசை நிறுவினர், என நம்பி வந்தனர்.



ஆகவே தான் ஆள்பதி, ஸ்ரட்ஹோல்டரைத் தம் அரசனாக ஏற்று அவனது ஆணையை மதித்து நடந்தனர். ஆனால் அவ்வேளையில் ஒல்லாந்தில் புதுக்குடியரசு மக்களின் விருப்பத்துடனேயே நிறுவப்பட்டதென அறிந்த ஆள்பதி, தான் இனிமேல் வில்லியத்துக்கல்ல, குடியரசு அரசாங்கத்துக்கே விசுவாசமாக இருக்க வேண்டுமெனத் தீர்மானித்தான். எனவே ஒல்லாந்தர் ஆங்கிலேயரின் பாதுகாப்பை ஏற்க மறுத்து தம் கோட்டைகளை அவர்களின் ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாக்க ஆயத்தம் செய்தனர்.

திருகோணமலையில் காவலிருந்த ஆங்கிலேயர், இச்செய்தியைக் கேள்விப்பட்டதுடன் 1795 ஒகஸ்ட் 23 இல் பிரடரிக் கோட்டையை உடனடியாகத் தாக்கி முற்றுகையிட்டனர். 26ஆம் நாள் ஒல்லாந்தர் சரண் அடைந்தனர். பிரடரிக் கோட்டைக்கு மூன்று மைல் தொலைவிலிருந்த ஒஸ்றன்பேக் கோட்டை ஒகஸ்ட் 31 இல் வீழ்ந்தது.

இதன் பின்னர் ஆங்கிலேயர், கரைவழியாகச் சென்று மட்டக்களப்பு முதல் நீர்கொழும்பு வரையுமிருந்த டச்சுக் கோட்டைகளை ஒவ்வொன்றாகக் கைப்பற்றினர். பல கோட்டைகள் ஆங்கிலேயரைக் கண்டவுடன் எவ்வித எதிர்ப்பும் காட்டாது சரண் புகுந்தன.

செப்டெம்பர் 18 இல் மட்டக்களப்பு வீழ்ந்தது. பருத்தித்துறை செப்டெம்பர் 24 இலும், யாழ்ப்பாணம் அடுத்த தினமும், முல்லைத்தீவு ஒக்டோபர் 1 ஆம் நாளும், நவம்பர் 13இல் கற்பிட்டியும் முறையே ஆங்கிலேயருக்காயின. இறுதியாக ஆங்கிலேயர் கொழும்பையும் தாக்க ஆயத்தம் செய்தனர்.

**திருகோணமலைகோட்டை (பிரட்ரிக்கோட்டை) பற்றி..**

திருகோணமலைகோட்டை (பிரட்ரிக்கோட்டை) திருகோணமலை நகரின் வடக்கே அமைந்துள்ளது. இந்தக் கோட்டை போர்த்துக்கேயரால் கட்டப்பட்டது. பின்னர் ஒல்லாந்தர் (பிரான்சியர் இதனை பிடித்து மீண்டும் ஒல்லாந்தரிடம் ஒப்படைத்தனர்) மற்றும் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டது.

இந்தக் கோட்டையினுள்ளேயே புகழ் பூத்த திருக்கோணேச்சர ஆலயம் அமைந்துள்ளது. தற்போது இலங்கை இராணுவதின் (படையாட்களின்) பலமான முகாமாக விளங்குகின்றது. தற்போது இங்கு கட்டுப்பாடுகள் இன்றிசென்று வரமுடியும். திருக்கோணேச்சரத்துக்குப் போகும் பாதையும் கோட்டைக்குப் போகும்பாதையும் ஒன்றாகும்.

**ஒஸ்டன்பேர்க் கோட்டைபற்றி...**

திருக்கோணமலை உள் துறை முகவாயிலில் ஒரு சிறிய கோட்டை ஒஸ்டன் பேர்க்கோட்டை டச்சுக் காரரினால் கட்டப்பட்டிருந்தது. இது 1795 இல் பிரித்தானியரிடம் சரணடைந்தது. இது இலங்கையில் இருந்த கோட்டைகளில் "மிகவும் சக்தி வாய்ந்த துப்பாக்கிகளின் கோட்டை" என அழைக்கப்பட்டது. இங்கு கடல் மட்டத்தில் பலமான பீரங்கித் தொகுதிகளும் பல பீரங்கிகளும் குன்றின் மேலும் காணப்பட்டன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாக்குதலுக்கு...

னர்.

நேற்று வியாழக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஊரவர்களால் ஒப்படைக்கப்பட்ட வன்முறை கும்பலை சேர்ந்த 10 இளைஞர்களையும் ஊர்காவற்றுறை பொலிஸார் கைது செய்து, பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

ஊர்காவற்றுறை பகுதியில் உள்ள பாடசாலையில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் வட்ஸ் அப் செயலியில் குழுமமாக செயற்பட்டு வந்துள்ளனர். அதன்போது இருவருக்கு இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு முரண்பாடு தோன்றியுள்ளது.

அதனையடுத்து ஒருவர் மற்றையவர் மீது தாக்குதல் நடத்துவதற்காக யாழ்ப்பாண நகர் பகுதியை அண்மித்த பகுதிகளை சேர்ந்த வன்முறை கும்பல் ஒன்றினை ஊருக்கு வரவழைத்துள்ளார்.

அதனையடுத்து ஊருக்குள் தாக்குதல் நடத்தும் நோக்குடன் வாள்கள் உள்ளிட்ட ஆயுதங்களுடன் நுழைந்த கும்பலை ஊரவர்கள் மடக்கி பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (ம-7,10,33)

## 24 இந்திய...

வைக்கப்பட்ட 18 மாதங்கள் சிறை என்ற நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை நீதிமன்றில், நீதவான் ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் நேற்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட 03 படகுகளில் 01 படகினை செலுத்திய நபருக்கு 6 மாத சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய இரு படகுகளில் ஒரு படகின் உரிமையாளர் படகில் இருந்தமையாலும் மற்றைய படகின் உரிமையாளரின் மகன் குறித்த படகில் இருந்தமையாலும் அவர் தந்தையின் மருத்துவ சான்றிதழை சமர்ப்பித்து குற்றத்தினை ஒப்புக்கொண்டமையால் இரு படகுகளும் அரசுடமையாக்கப்பட்டன. (ம-7,10,33)

## தலைவராக...

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கு அமைய கொழும்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதி சந்துன் விதான இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இந்த நிலையில், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து புதிய பயணத்தை மேற்கொள்ள அனைவருக்கும் அழைப்பு விடுப்பதாக துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பதவிகளில் இருந்து நீக்கப்பட்ட துமிந்த திஸாநாயக்க, லசந்த அழகியவன்ன மற்றும் மகிந்த அமரவீர ஆகியோர் நேற்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சார்பில் விசேட செய்தியாளர் மாநாட்டை நடத்தியபோதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இந்த விசேட செய்தியாளர் மாநாடு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

அவர்கள் மேலும் கூறியதாவது, "கட்சியின் அழிவினை பார்த்துக் கொண்டிருக்க முடியாத நிலையிலேயே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க நீதிமன்றத்தை நாடினார். அதற்கிணங்க, கட்சியின் தலைவராக இருந்த மைத்திரிபால சிறிசேனவுக்கு தடை விதிக்கப்பட்டது" என்று குறிப்பிட்டுள்ளனர். (ம-7,10)

## கிளிநொச்சி...

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சி பிரமந்தனாறு பகுதியில் உள்ள பாடசாலையொன்றில் நேற்று பிற்பகல் விளையாட்டுப் போட்டி நடைபெறுவதற்கு ஏற்பாடாக இருந்த நிலையில் பாடசாலையில் வைத்து இரு குழுக்களிடையே ஏற்பட்ட பிரச்சினை ஒன்றின் விளைவாக இரண்டு தரப்புகளுக்கு இடையில் பாடசாலை வளாகத்தில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

இதனையடுத்து பாடசாலை நிர்வாகம் இருதரப்புகளையும் சமரசம் செய்து பாடசாலை வளாகத்தை விட்டு அனுப்பியிருந்தது.

இதன் பின்னர் மீளவும் குறித்த இரண்டு தரப்பினரும் புன்னைநீராவி பிள்ளையார் ஆலய சந்திப் பகுதியில் மீளவும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இது தொடர்பில் பிரதேச மக்களால் ஏற்கெனவே பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்குச் சென்ற தருமபுரம் பொலிஸார் இருவரை கைது செய்து பின்னர் அவர்களை மீளவும் இறக்கி விட்டு சிறிது தூரம் சென்ற பின்னரே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கத்திக்குத்துத் தாக்குதலுக்கு இலக்காகியவர் வைத்தியசாலை கொண்டு செல்லும் வழியிலேயே உயிரிழந்துள்ளார். இதேவேளை குறித்த சம்பவத்தில் மேலும் மூவர் காயமடைந்துள்ளனர்.

பல தடவை கத்திக்குத்துக்கு இலக்கான 32 வயதுடைய சவரிமுத்து ஜோன் பற்றிக் என்ற குடும்பஸ்தரே தருமபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் பொழுது உயிரிழந்துள்ளார்.

கத்திக்குத்து தாக்குதலை நடத்திய சந்தேகத்தில் தருமபுரம் பொலிஸாரால் இதுவரை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7,10,315)

## மயங்கி விழுந்த...

சேர்ந்த செபமாலை செல்வராசா (வயது-45) என்ற 5 பிள்ளைகளின் தந்தையே உயரிழந்தவராவார்.

கடந்த மாதம் 31ஆம் திகதி பிற்பகல் நித்திரைக்குச் சென்றதாகவும் மறுநாள் காலை 7.00 மணிவரை அவர் எழுந்திருக்காத நிலையில் பார்த்தபோது அவர் மயக்கமடைந்த நிலையில் காணப்பட்டார்.

காலை 8.00 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று வியாழக்கிழமை முற்பகல் சிகிச்சைப் பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7,10,60)

## கல்வி...

EEE"எனும் பெயர் கொண்ட நபர் இந்த ஊடுருவல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

அமைச்சின் இணையத்தளத்தில் உள்ள பாதுகாப்பு குறைபாடுகளை முன்னிலைப்படுத்தி இந்த ஊடுருவல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறித்த நபர் இணையத்தளத்தில் செய்தியொன்றை பதிவிட்டுள்ளார்.

மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"எனது பெயர் Anonymous EEE. நான் தற்போது உயர்தரக்கல்வி கற்று வருகிறேன். உங்கள் இணையதளத்தை ஊடுருவியமைக்கு மன்னிக்கவும்.

எனினும், உங்கள் இணையதளத்தில் சில பாதுகாப்பு குறைபாடுகள் உள்ளன.

இலங்கைப் பிரஜை என்ற வகையில் எனது நாட்டின் பாதுகாப்பிற்காக இதனைத் தெரிவிக்கின்றேன்.

அதைச் சரி செய்யவும். நன்றி" என குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7,10)

## நாட்டின்...

படுத்தப்படும் விடயம்.

எனவே இந்த விடயம் தொடர்பாக தமிழ்க் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் மட்டும் கலந்துரையாடுவது போதுமான விடயமல்ல.

மாறாக இது தொடர்பில் அனைத்து கட்சிகளுடனும் பேசவேண்டுமென்பதே தனது நிலைப்பாடு என அவர் தெரிவித்துள்ளார். (ம-7,10)


மஹஜன சம்பத
திகதி 2024.04.04
சீட்டிழுப்பு இலக்கம் 5440
R 8 1 2 1 4 7
அத சம்பத
R 2 1 4 7
சீட்டிழுப்பு இலக்கம் 0015
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.04.04
சீட்டிழுப்பு இலக்கம் - 1470
F 37 41 43 51 F
21677

மெகா பவர்
திகதி 04/04/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1788
D 07 11 21 51 77
71090

லக்கி 7 VIP
திகதி 2024.04.04
சீட்டிழுப்பு இலக்கம் 0266
N 5 3 7 4 3 1 N

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3682
சீட்டிழுப்பு திகதி 04.04.2024
C 06 11 16 24
C
24803
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.04.04
சீட்டிழுப்பு இலக்கம் 0749
மிதுனம் 14 28 32 56 மிதுனம்
28577 18

உத்தியோகபூர்வ முடிவுகள்
04.04.2024 வெற்றி வாரம் 148 வர்ணம் மஞ்சள்
ஆங்கில எழுத்து F
6 7 3 8 3 6
64322 N
அடுத்த சுப்பர் ஜக்பொட 20,072,524.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2414 வர்ணம் பச்சை சீட்டிழுப்பு திகதி 04.04.2024 தினம் வியாழன்
வெற்றி இலக்கங்கள் 39 43 58 72 N
49167
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 82,134,640.80
DLB

சனிதா
திகதி 2024.04.04 வெற்றி வாரம் 4575 வர்ணம் சிவப்பு
41 46 65 73 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,234,658.00
13688
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4126 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2024.04.04 தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 07 20 35 41 கடகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 16,648,774.40
535615
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 05 07 24 47 75
1590 ஆரஞ்சு நிறம் 2024.04.04 வியாழன்
166258
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 515,960,605.80
DLB

வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2240
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 104,366,615.20
ADA KOTIPATHI
13 72 73 76 O
760403
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணப்பெண் தேவை

- நல்லூர், இந்து, கௌரவகுலம், 1986, உத்தரம், MBA UK Citizen, மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- மயிலிட்டி, இந்து, கௌரவகுலம், 1985, ரோகினி, Dip in International Business, Canada citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கரவெட்டி, இந்து, கௌரவகுலம், 1982, மிருகசீரிடம், Bachelor of Marine Engineering, Netherland மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- வண்ணார்பண்ணை, இந்து, கௌரவகுலம், 1983, கேட்டை, IT Diploma, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- சுருவில் - வண்ணார்பண்ணை, இந்து, கௌரவகுலம், 1987, அஸ்வினி, BSc, MSc, Australia, மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- அல்வாய்-மீசாலை, இந்து, கௌரவகுலம், 1987, பூசம், BSc in Civil Engineering, Structural Engineering மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கோப்பாய் - சுன்னாகம், இந்து கௌரவகுலம், 1988, பூரட்டாதி, Finance MBA Financial Analyst Canada - USA, Dual citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- யாழ்ப்பாணம், இந்து, கௌரவகுலம், 1989, உத்திரட்டாதி, Biomedical and Electrical Engineering, Software Engineering, Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- இணுவில், இந்து, கௌரவகுலம், 1990, அனுஷம் Quantity surveyor, Cost Engineering, Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

(358)

✆ -077 539 3728 -077 803 8193

## துன்பங்களை...

தனது மனைவி "நளினி" ஒரு இந்திய பிரஜை என்பதால், தமிழகத்தில் இருப்பதாகவும், சிறையில் பிறந்த தனது ஒரே மகள் புலம்பெயர்ந்து பிரிட்டனில் வாழ்வதாகவும், இந்நிலையிலேயே தான் இலங்கைக்கு அனுப்பப்பட்டதால் தற்போது தாயாருடன் வசிப்பதாகவும் குறிப்பிட்டுள்ள முருகன், தயவு செய்து, தமது விடுதலை சாத்தியமாவதற்கு உந்து சக்திகளாக இருந்து துணைபுரிந்தவர்கள், தனது மனைவி பிள்ளையுடன் தானும் சேர்ந்து வாழும் நிலைமைக்கு வழி செய்துதவுமாறு கோரிக்கை முன்வைத்துள்ளார்.

மேலும், இத்தனை வருட காலங்களும் துன்பங்களை மட்டுமே அனுபவித்து நடைபிணங்கள் போன்று சிறைமீண்டு வந்திருக்கும் தம்மை, "இனிமேலாவது குடும்ப உறவுகளுடன் நிம்மதியாக காலத்தைக் கழிப்பதற்கு வழிவிட வேண்டும் என்பதே தமது பிரார்த்தனை " எனத் தெரிவித்துள்ள முருகன், பயஸ், ஜெயக்குமார் தமது விடுதலைக்காக பல்வேறு வழிவகைகளிலும் போராடிய உலக வாழ் தமிழ்ச் சொந்தங்கள் அனைவருக்கும் தமது வாழ்நாள் நன்றிகளை காணிக்கை செய்வதாக தெரிவித்தனர்.

(ம-7,10,299)

## வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்

தொடர்புகளுக்கு: (318)

074 17 37 684

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-0069)

## விற்பனைக்கு

- தனங்களப்பு சந்திக்கு அருகாமையில் (சாவகச்சேரி) தென்னை உள்ள காணி விற்பனைக்கு உண்டு.
- லயன் பொமேரியன் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

(357)

077 172 1074

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் இயங்கிவரும் புத்தகசாலை ஒன்றிற்கு விற்பனையாளர்கள் (பெண்கள்) தேவை.

(355)

077 248 7662

## IELTS - 06.04.2024 New Batch ஆரம்பம்

இத்துடன் Basic & Advance Grammar Classes

இல.53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.

077 798 9830 By:-B.MURALI

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (343)

## வீடு விற்பனை

சுன்னாகம் கிழக்கு புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் வீடு விற்பனைக்குள்ளது.

Whatsapp
416 303 5706
SRILANKA
076 934 7728

(324)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

(C-0069)

எமது கிளைகள்

- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் திருநெல்வேலி அம்மாச்சி உணவகத்திற்கு முன்பாக 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பிரித்தும் கொடுக்கப்படும். விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தரகர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம்.


(351)

தொடர்புகளுக்கு :

076 206 1703

# மரண அறிவித்தல்

மலர்வு 14 - 02 - 1945



உதிர்வு 03 - 04 - 2024

## சண்முகம் பாலகிருஷ்ணன்

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சண்முகம் பாலகிருஷ்ணன் அவர்கள் 03.04.2024 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் இராஜமலர் அவர்களின் அன்புக் கணவரும் துளசி, கஸ்தூரி, காயத்திரி, மாதுமை, மயூரி ஆகியோரின் அன்புத் தந்தையும் ரகுராமன், மாசிலன், சந்திரபிரகாஷ், நிருபன், பிரதித்தன் ஆகியோரின் மதிப்புக்குரிய மாமாவும் நிசாங்கி, நிகேதன், காசினி, நிகாஷ், நிதேஷ், கமானி, நிதாரா, ஸ்வரஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 05.04.2024 வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 1.00 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சாவகச்சேரி,
சங்கத்தானை.

(C-0067)

தகவல்:
குடும்பத்தினர்

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 22.02.2024 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர்

## செல்லையா சின்னத்தம்பி

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை 06.04.2024 சனிக்கிழமை நண்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

(C-0066)

4 ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

077 281 8887

இங்ஙனம்
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்றெட் ஸ்தாபனத்தாரால் இல 101, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org